29 MAY 1998

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 1 வள்ளுவர் ஆண்டு 2029 வைகாசி 15 (29-05-1998) வெள்ளிக்கிழமை UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 156

## 5 அணு வெடிப்புகளை பாக். பரிசோதித்தது!

### உபகண்டத்தில் அணு ஆயுதப் போட்டி

லண்டன், மே 29

நிலத்துக்கு அடியிலான ஐந்து அணு வெடிப்புப் பரிசோதனைகளை பாகிஸ்தான் நேற்று பிற்பகல் நடத்தியது.

இது தொடர்பான உத்தியோக பூர்வ அறிவிப்பை பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப் நேற்று மாலை வெளியிட்டார்.

பாகிஸ்தானின் இந்த அணு வெடிப்புப் பரிசோதனைகள் குறித்து உலகநாடுகள் பல சண்டனம் தெரிவித்துள்ளன.

நேற்று இந்திய நேரப்படி பிற்பகல் 3.53 மணிக்கு பாகிஸ்தான் தலைநகராகிய இஸ்லாமாபாத்தில் இருந்து 500 கிலோ மீற்றர் தூரத்தில் மேற்குப் பாகிஸ்தானில் உள்ள சகாய் மலைப் பகுதியில் இந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ரெலிக்கொம் நிறுவனத்தை தகர்ப்பதற்கு முயற்சி

### குண்டு செயலிழப்பு

கொழும்பு, மே 29

இரத்தினபுரி ரெலிக்கொம் நிறுவனத்தில் எலக்ரோனிக் மணிக்கூட்டுடன் இணைக்கப்பட்ட நிலையில் இருந்த அதிசக்தி வாய்ந்த குண்டு ஒன்று நேற்று கண்டு பிடிக்கப்பட்டது.

இந்தக் குண்டை அங்கு வைத்துக் கொண்டிருந்த நபர் ஒருவரை அங்கு காவலுக்கு நின்றவர்கள் கண்டு கூச்சலிட்டதாகவும் —

இதனை அடுத்து அந்த நபர் தப்பி ஓடிவிட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

அந்தக் குண்டை அவர் பொருத்தியபோது அவருக்கு ஏற்பட்ட காயம் காரணமாக அந்த இடத்தில் இரத்தக் கறை காணப்பட்டதாகவும் —

பின்னர் இராணுவத்தினர் வந்து குண்டைச் செயல் இழக்கச் செய்ததாகவும் —

சி.4 ரகத்தைச் சேர்ந்த பிளாஸ்டிக் வெடி மருந்து இக்குண்டில் இருந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது

(இ-21-10-3)

# மாங்குளத்தை நோக்கிய நகர்வை படையினர் மீண்டும் ஆரம்பித்தனர்!

## அனுருத்த நேற்று போர் முனைக்கு விஜயம்

வவுனியா, மே 29

வவுனியா — யாழ்ப்பாணம் பாதையைத் திறப்பதற்கான "வெற்றி உறுதி" இராணுவ நடவடிக்கைத் துருப்பினர் மாங்குளம் நகரை நோக்கிய தமது நடவடிக்கையை நேற்று அதிகாலை மீண்டும் ஆரம்பித்துள்ளதாக வவுனியா தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதே வேளை — பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த நேற்றுக் காலை போர்முனைக்கு விஜயம் செய்து நடவடிக்கையை நேரடியாகப் பார்வையிட்டார்.

வவுனியா — யாழ்ப்பாணம் தரைவழிப் பாதையைத் திறப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை ஒரு வருடத்தைக் கடந்து இரண்டாவது வருடத்தில் நடைபோடு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வட்டக்கச்சி நோக்கி படையினர் ஷெல் தாக்கு

வவுனியா, மே 29

ஆனையிறவு முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு படையினர் வட்டக்கச்சி பகுதி நோக்கிச் ஷெல்தாக்குதலை மேற்கொண்டதாக வவுனியாவுக்கு கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் அவை வீழ்ந்து வெடித்த போதும், மக்கள் பாதுகாப்பு இடங்களை நாடியதால் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

## ஒலுமடு பகுதி நோக்கி புலிகள் ஆட்லறி தாக்கு

### எட்டு படையினர் காயம்

வவுனியா, மே 29

மாங்குளம், ஒலுமடு பகுதி இராணுவ நிலைகள் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் மோட்டார் மற்றும் ஆட்லறி தாக்குதல்களை நடத்தினர்.

இராணுவத்தினரும் புலிகளின் நிலைகளை நோக்கி பதில் தாககுதல் நடத்தினர். நேற்றுக் காலை முதல் இப்பகுதியில் விமானத் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

விடுதலைப் புலிகளின் மோட்டார் மற்றும் ஆட்லறித் தாக்குதல்களில் எட்டு இராணுவத்தினர் காயம் அடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

### மூச்சந்தி முரளி



உப கண்டத்தில அணு வெடிப்பில சாதனை இலங்கையில குண்டு வெடிப்பில சாதனை.........!

## தெஹிவளையில் நேற்று மின் மாற்றி தகர்ப்பு!

### சக்தி வாய்ந்த குண்டால்!

கொழும்பு, மே 29

தெஹிவளை சென். மேரிஸ் தேவாலயத்துக்கு அருகில் அமைந்துள்ள மின்மாற்றி ஒன்று நேற்று அதிகாலை 4 மணிக்கு அதிசக்தி வாய்ந்த குண்டு ஒன்றினால் தகர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

500 கிலோ வாட்ஸ் முதல் 600 கிலோ வாட்ஸ் மின்சாரத்தைக் கடத்தும் இந்த மின்மாற்றியில் பொருத்தப்பட்ட நேரம் குறித்து வெடிக்கவைக்கும் குண்டு ஒன்று வெடித்ததால், அந்த மின்மாற்றியில் இருந்து பரவிய எண்ணெய் தீப்பிடித்து எரிந்ததாக நேரில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்நகரில் ஊரடங்கு வேளையில் நகைக்கடையில் துணிகரத் திருட்டு!

யாழ். கஸ்தூரியார் வீதியிலுள்ள நகைக்கடை ஒன்றில் நேற்று முன்தினம் இரவு ஊரடங்கு நேரத்தில் நகைகள் திருடப்பட்டுள்ளன.

இரவு நேரத்தில் கடையின் பின்பக்க பூட்டுக்களை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் கடைக்குள்ளிருந்த பெட்டகத்திலிருந்தும், காட்சிக்காக வைக்கப்பட்டிருந்த பெட்டிகளிலிருந்தும் நகைகளைத்திருடிச் சென்றுள்ளனர். திருடப்பட்ட நகைகளின் பெறுமதி 8 இலட்சத்து 45 ஆயிரம் என தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை வழமை போல கடையைத் திறந்த உரிமையாளர் பூட்டுக்கள் உடைக்கப்பட்டு நகைகள் திருடப்பட்டதைக் கண்டு யாழ் பொலீஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

இந்தத் திருட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நகைக்கடை உரிமையாளர்கள் சிலர் நேற்றுத் தமது கடைகளை மூடினர்.

யாழ். பொலீஸார் இந்தத் திருட்டுத் தொடர்பாக விசாரணை நடத்திவருகின்றனர்.

(இ-15-139-135-5)

## ஜி. சீ. ஈ. பரீட்சை முடிவுகள் நேற்று யாழ்ப்பாணத்தில் வெளியாகின

யாழ்ப்பாணம், மே 29

கடந்த டிசம்பர் மாதம் நடந்த ஜி. சீ. ஈ. (சாதாரண தர) பரீட்சை முடிவுகள் நேற்று நண்பகல் யாழ்ப்பாணத்தில் வெளியாகின.

கொழும்பில் இருந்து விமான மூலம் எடுத்து வரப்பட்ட பரீட்சை முடிவுகள் கோட்டங்கள் மூலமாகப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன.

நகரப் பாடசாலைகளில் பெறுபேறுகள் திருப்திகரமாக இல்லாத போதும் ஏனைய பகுதிகளில் ஓரளவு சிறந்த பெறுபேறுகள் கிடைத்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று மாலை வரை கிடைத்த பரீட்சை முடிவுகள் வருமாறு:-

யாழ் இந்து

8டி — மூவர், 7டி, சி — ஐவர், 7டி — ஒருவர், 7டி, எஸ் — மூவர், 6டி—24 பேர், 5டி — 29 பேர்.

யாழ். இந்து மகளிர்

6டி, 2சி — ஒருவர், 6டி, சி, எஸ் — ஒருவர், 5டி — அறுவர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# விடைத்தாள் மதிப்பிடும் ஆசிரியர் விவரம் மீளாய்வு

ஜி.சீ.ஈ. உயர்தர, சாதாரண தர மற்றும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை போன்றவற்றுக்கான விடைத்தாள் பரீட்சகர்களை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்களை கல்வித்திணைக்களம் ஆசிரியர்களிடமிருந்து கோரியுள்ளது.

விண்ணப்பங்களை அனுப்ப விரும்பும் ஆசிரியர்கள், அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவங்களைபார்வையிட்டு, விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்து விண்ணப்பிக்குமாறும் —

விண்ணப்பங்களை ஜூன் மாதம் 10 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறும பரீட்சை ஆணையாளர் நாயகம் ஏ. எம். ஆர். பி. அமரக்கோன் அறிவித்துள்ளார்.


## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

அண்மையில் அமரத்துவம் எய்திய இணுவில்
**பிரம்மஸ்ரீ நடராஜஐயர் கந்தசாமிஐயர்**
(இளைப்பாறிய ஆசிரியர்) அவர்கட்கும்,

கோப்பாய்
**சிவானந்தசர்மா தாட்ஷாயணிஅம்மா**
(இசையாசிரியர்) அவர்கட்கும்

24-05-98 அன்று நடைபெற்ற சங்கத்தின் மாதாந்தக் கூட்டத்தில் மௌன அஞ்சலி செலுத்தி, அன்னார்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்யப்பட்டது. அன்னார்களின் குடும்பஸ்தர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும், கவலைகளையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இலங்கை இந்துமத குருமார் ஒன்றியம்,
யாழ்ப்பாணம்.

(56398)

## மரண அறிவித்தல்கள்

### ந. கோபாலகிருஷ்ணராசா
(சில்லாலை)
(தெல்லிப்பழை வைத்தியசாலையின் ஓய்வுபெற்ற காவலாளி)

சில்லாலையைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணராசா 28 – 5 – 98 வியாழக்கிழமை காலமானார்.

இவர் சில்லாலையைச் சேர்ந்த அமரர் நடராசா தம்பதியினரின் மகனும், இராசகுமாரியின் அன்புக் கணவனும், வே. தாமோதரம்பிள்ளை, தவமணி ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 30 – 5 – 98 சனிக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சம்பில்துறை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இராசகுமாரி
(மனைவி)

சில்லாலை மேற்கு,
பண்டத்தரிப்பு.

(56361)

### இரத்தினசபாபதி சண்முகலிங்கம்

அச்சுவேலி தெற்கு, காளிகோயிலடியை சேர்ந்த பிரபல சோதிடர் சி. இரத்தினசபாபதியின் மூத்த புதல்வன் இரத்தினசபாபதி – சண்முகலிங்கம் (முன்னாள் கணக்காளரும், சோதிடரும் கல்லோயா மகாவலி அபிவிருத்திச் சபை) அவர்கள் 27 - 05 – 98 இல் புத்தளத்தில் காலமானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 28 – 05 – 98 இல் புத்தளத்தில் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுச் கொள்ளவும்.

தகவல்:
வி. வளர்மதி
(மகள்)

காளி கோயிலடி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(56369)

### திருமதி செல்லக்கண்ணு பொன்னுத்துரை

98/2, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லக்கண்ணு பொன்னுத்துரை நேற்று (28-05-98) இல. 6, ருத்ரா மாவத்தை, வெள்ளவத்தையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இளையதம்பி தம்பதிகளின் புத்திரியும், காலஞ்சென்ற மயில்வாகனம் தம்பதிகளின் மருமகளும், நகுலேஸ்வரி (கனடா), ஜெகதீஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை), நிர்மலேஸ்வரி (லண்டன்), கங்கேஸ்வரி (கனடா), ஸ்ரீகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், தம்பிராஜா, மகேந்திரன், துரைராஜா, மங்களா ஆகியோரின் மாமியாரும், சங்கரி, சத்யன், நித்யன், கணானன், கஜோ, ஆரணி ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
திருமதி கமலாதேவி குணபாலசூரியர்
(சகோதரி)

(56391)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
★ A/L 2000 - கலை, வர்த்தகம், கணிதம்
★ O/L மீட்டலுடன் வினா- விடை வகுப்புகள்
**SHAMROCK**
(56402)

**நாகம்ஸ் சினிமா**
சுன்னாகம்.
29-05-98 முதல்
அகல வெண் திரையில்
மோகன், கார்த்திக் ரேவதி நடித்த
**மௌனராகம்**
காட்சி:- 10-30, 2-30
(56382)

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி
இன்று மட்டும்
விஜயகாந்த் - ராதிகா ஆனந்தராஜ் நடித்த
**ராஜதுரை**
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
சனி மட்டும்
**TITANIC**
Part I & II
(மாணவர்கள், பெண்கள் பார்க்கவேண்டிய உண்மைக் கதை)
Tele. No. 070 - 212223
(56294)

**ராஜா டாக்கீஸ்**
யாழ்ப்பாணம்.
கார்த்திக், சௌந்தர்யா நடித்த
**பொன்னுமணி**
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
கடைசி வாரம்
(சி/3830)

**ஸ்ரீ செல்வா திரையரங்கு**
ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.
அனேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க
10-30, காட்சி
பிரசாந்த்
(இரு வேடங்களில்)
**ஜீன்ஸ்**
(நேரடி CD யில்)
2-30 காட்சி
அருண்குமார் - குஷ்பு
**துள்ளித் திரிந்த காலம்**
சனி, ஞாயிறு
10-30, 2-30 மணிக்கு
பிரசாந்த் - ஐஸ்வர்யா
**ஜீன்ஸ்**
(56394)

## தேவை

★ கணக்காளர்
★ லிகிதர்
★ விற்பனையாளர்

ஆகிய பதவிகளில் அனுபவமும் ஆற்றலும் நிரம்பிய பெண்கள் தேவை.

விளம்பர இலக்கம்: 741
C/o உதயன்
யாழ்ப்பாணம்.
(56401)


# கூட்டுறவு வங்கி சமாசம் ஜூன் முதல் இயங்கும்

அரியாலை மே 29

புதிதாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட யாழ். குடாநாட்டு கூட்டுறவு வங்கிகளின் சமாசம் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் செயற்படவுள்ளது.

இந்த சமாசம் முறைப்படி பதிவு செய்யும் நிகழ்வு கூட்டுறவு ஆணையாளர் அலுவலகத்தில் கூட்டுறவு உதவி ஆணையாளர் க. சண்முகநாதன் தலைமையில் கடந்த புதன்கிழமை இடம் பெற்றது.

பதிவு செய்யும் வைபவத்தில் கிராமிய வங்கிகளின் தலைவர் சீ. வி. சே. சிவஞானம், உபதலைவர் சி. குமாரவேல், இயக்குநர் சபை உறுப்பினர் சி. சிவசுப்பிரமணியம், கூட்டுறவு ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர் கணேசமூர்த்தி ஆகியோரும் கலந்து கொண்டனர். [ஐ–17]

# அடையாள அட்டை

யாழ். மாவட்டத்திலிருந்து தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களின் 4 ஆயிரம் அடையாள அட்டைகள் கொழும்பிலிருந்து நேற்று யாழ். செயலகத்திற்கு வந்துசேர்ந்தன.

இவற்றை அந்தந்த பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கையில் ஆட்பதிவுத் திணைக்கள ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.


உ
மாவை கொல்லங்கலட்டி
அருள்மிகு
**ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயில்**
**மஹோற்சவ விஞ்ஞாபனம்**

| | | | | |
|---|---|---|---|---|
| கொடியேற்றம் | : | 01 - 6 - 98 | — | பகல் 11 மணி |
| தேர் | : | 09 - 6 - 98 | — | பகல் 10 மணி |
| தீர்த்தம் | : | 10 - 6 - 98 | — | பகல் 10 மணி |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். தெல்லிப்பழையிலிருந்து கோயிலுக்கு பஸ் சேவையை காங்கேசன்துறை சட்டளைத் தளபதி ஒழுங்கு செய்துள்ளார்.

ஸ்ரீலஸ்ரீ கு. சிவஷண்முகானந்தக் குருக்கள்
அறங்காவலர்

(56396)

யாழ்ப்பாண பல்கலைக்கழக
இராமநாதன் நுண்கலைக்கழகக்
**கவின் கலை மன்றம்**
நடத்தும்
**நடன நூல் வெளியீடு**

நூல் - தென்னாசிய சாஸ்திரிய நடனங்கள் ஒரு வரலாற்று நோக்கு
ஆக்கியோன்:- பேராசிரியர் வி. சிவசாமி
(தலைவர், சம்ஸ்கிருதத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
நாள்:- 29 - 05 - 98 வெள்ளிக்கிழமை
நேரம்:- பிற்பகல் 2-30 மணி (புதிய நேரம்)
இடம்:- கலையரங்கு,
இராமநாதன் நுண்கலைக்கழகம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், மருதனார்மடம்.
தலைமை:- செல்வி ம. காதம்பரி
(உப தலைவர், கவின் கலை மன்றம்)
பிரதமவிருந்தினர்:- பேராசிரியர்
பொ. பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

நிகழ்ச்சி நிரல்

மங்கல விளக்கேற்றல்:-
இறை வணக்கம்: M. சுசீலா (கவின் கலை மன்றம்)
வரவேற்புரை: செல்வி செ. ஸ்ரீமோகனா
வாழ்த்துரை: பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)
நூல் வெளியீடும், பிரதம விருந்தினர் உரையும்:
முதற் பிரதி பெறுநர்: திரு. ச. ரவீந்திரா
(உதவி முகாமையாளர், வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம்)
நூல் அறிமுகவுரை: பேராசிரியர்
ப. கோபால கிருஷ்ணன்
(தலைவர், இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
ஆய்வுரைகள்:- கலாநிதி சபா. ஜெயராசா
(தலைவர் நடனத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
திரு. சு. கணபதிப்பிள்ளை
(பிரதிக் கல்விப் பணிப்பாளர் - இசை கல்வி வலயம் II)
நூலசிரியர் பதிலுரை:
நன்றியுரை: செல்வி க. சுபாலினி
(செயலாளர், கவின் கலை மன்றம்)
நூல்பிரதி விலை ரூபா 175

இவ்விழாவிற்குச் சமுகமளித்துச் சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கவின்கலைமன்றம்
இராமநாதன் நுண்கலைக் கழகம்.
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
மருதனார்மடம்.

(55423)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[library stamp] நல்லூர் ... நூலகம்

# அணு நிலைகளைத் தாக்க இந்தியா திட்டமிட்டுள்ளது

## பாகிஸ்தான் குற்றச் சாட்டு

இஸ்லாமாபாத், மே 29

பாகிஸ்தானின் அணு உற்பத்தி நிலைகள் மீது இந்தியா தாக்குதல் நடத்துமானால் அதற்கு பாரதூரமான முறையில் பதிலடி கொடுக்கப்படும் என்று பாகிஸ்தான் எச்சரித்துள்ளது.

நேற்று இஸ்லாமாபாத்தில் உள்ள இந்தியத் தூதரை வெளிவிவகார அமைச்சுக்கு அழைத்து பாகிஸ்தான் இவ்வாறு எச்சரித்தது.

பாகிஸ்தானின் அணு உற்பத்தி நிலைகள் மீது இன்று அதிகாலைக்குள் இந்தியா தாக்குதல் நடத்தக் கூடும் என்ற உளவுத் தகவல்கள் கிடைத்ததை அடுத்தே இஸ்லாமாபாத் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இந்திய அரசாங்கம் இத்தகைய பொறுப்பற்ற நடவடிக்கை எதிலும் ஈடுபடமாட்டாது என இஸ்லாமாபாத் நம்புவதாக புதுடில்லியிடம் தெரிவிக்குமாறு இந்தியத் தூதர் கேட்கப்பட்டிருக்கிறார்.

இதேவேளை —

பாகிஸ்தான் தனது அணுஆயுத சோதனையை நடத்துவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் பூர்த்தி செய்துவிட்டதாகவும் —

பெரும்பாலும் இன்று அது அணுச் சோதனையை மேற்கொள்ளலாம் என்றும் இஸ்லாமாபாத்தில் வெளியாகும் தினசரி ஒன்று தெரிவித்துள்ளது.

மத்திய பாகிஸ்தானில் உள்ள சகாய் மலைப் பகுதியில் மண் சுரங்கம் ஒன்றின் வாயில் ஊடாக அணு சாதனக் கருவியை ஒத்த ஒரு கருவி இறக்கப்பட்டதை அமெரிக்க உளவு செய்மதிகள் கண்டறிந்திருப்பதாக வாஷிங்டனில் இருந்து வெளியான செய்திகள் தெரிவித்தன.

நிதானமாக நடந்து கொள்ளுமாறு பாகிஸ்தான் மீது உலக அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருகின்ற போதிலும் அது அணு சோதனை நடத்த தயாராகி விட்டதாகத் தகவல்கள் கூறுகின்றன. (ஐ-8)

## இந்தியா மறுப்பு!

புதுடில்லி, மே 29

பாகிஸ்தானின் அணு நிலைகள் மீது தாக்குதல் நடத்த இந்தியா திட்டமிட்டிருப்பதாக இஸ்லாமாபாத் தெரிவித்த குற்றச்சாட்டை புதுடில்லி மறுத்துள்ளது. (ஐ)

## கிளின்ரனின் சீன விஜயம் உறுதி

வாஷிங்டன். மே 29

அடுத்த மாதம் சீனாவில் மேற்கொள்ள இருக்கும் விஜயத்தை ஒத்திவைக்கப் போவதில்லை என்று அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் தெரிவித்துள்ளார்.

சீன – அமெரிக்க உறவு பலதுறைகளில் வெற்றியளித்துள்ளதால் தமது சீனப் பயணம் அவசியமாகிறது என்று அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (ஐ)

## தாய்மை பேணும் தினம்

டாக்கா, மே 29

பங்களாதேஷில் நேற்று 'தாய்மை பாதுகாப்பு'' தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

பிரசவத்தின் போது இறக்கும் தாய்மாரின் எண்ணிக்கை உலகிலேயே பங்களாதேஷில் தான் அதிகம். அங்கு ஆண்டுதோறும் 3 லட்சம் தாய்மார்கள் பிரசவத்தின் போது உயிரிழக்கின்றனர்.

பெண்களின் உடல் நிலையைப் பேணுவதில் உரியகவனம் எடுக்கப்படாததே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ)


யா / சங்கானை

சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

இலவச தமிழ் -தட்டெழுத்து கருக்செழுத்துப் பயிற்சி நெறியைடயில விரும்புபவர்கள் 01-06-98-க்கு முன் (திங்கள்) பாடசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளவும்.

- அதிபர்

(56387)



31-ம் நாள் நினைவஞ்சலி



கேசாவத்தை ஏழாலை மேற்கைச் சேர்ந்த

அமரர்

இராசையா தங்கம்மா

வையகம் !0 - 11 - 1930

வானகம் 29 - 04 - 1998

இன்று 29 – 05 – 1998 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் இதனைத் தொடர்ந்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர், யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரது பிரிவால் துன்புறும்:

கணவர், சகோதரன்,

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கேசாவத்தை,

ஏழாலை மேற்கு.

(56380)


உலக அரங்கில்

## மேற்கு வங்கத்தில் ஹர்த்தால்

புதுடில்லி, மே 29

இந்தியாவின் மேற்கு வங்காள மாநிலத்தில் பிரம்மூர் காங்கிரஸ் நேற்று முன்தினம் காலைமுதல் நடத்திய 12 மணி நேர ஹர்த்தாலால் அங்குஇயல்பு நிலை பாதிக்கப்பட்டது.

பிரம்மூர் காங்கிரஸின் உறுப்பினர்கள் பலரும் ரயில் தண்டவாளத்துக்கு குறுக்கே படுத்திருந்து ரயில், பஸ் போக்குவரத்துக்கு தடை விதித்தனர்.

அரச திணைக்களங்கள் யாவும் வெறிச்சோடிக் [illegible] வருகையும் [illegible] குறைவாகக் காணப்பட்டது. (இ-7)


அறிவித்தல்

ஊர்காவற்றுறை பிரதேச செயலக விளையாட்டு கழகங்களுக்கு இடையிலான தடகள விளையாட்டுப்போட்டி - 1998

மேற்படி விளையாட்டு விழா 1998 – 05 – 29 வெள்ளிக்கிழமை, 1998 – 05 – 30 சனிக்கிழமை ஆகிய நாள்களில் ஊர்காவற்றுறை பிரதேச சபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

விளையாட்டுக் குழு.

உதவி அரசாங்க அதிபர் பணிமனை,

(56370) ஊர்காவற்றுறை.



THE JAFFNA EDUCATION CENTRE

யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

( சாந்தி சினிமா முன்பாக மேல் மாடியில் )

SPOKEN ENGLISH

With

GRAMMAR

சிங்களம்

SHORT-HAND TYPING

ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.

புதிய பிரிவு ஆரம்பம்: 30 - 05 - 98

(56678) - இயக்குநர்



தூய ஆவியானவரின் பெரு விழாத் திருவிழிப்பு

இடம்: புனித மடுத்தினார் குருமடம்

பிரதான் வீதி. யாழ்நகர்

30 - 05 - 98 சனிக்கிழமை மாலை 8. 00 மணி (புதிய நேரம்) தொடக்கம் ஞாயிறு காலை 4. 30 வரை திருப்பலி.

தூய ஆவியானவரின் பெருவிழாவில் உள்ளார்ந்த குணமாக்கல்

இடம்: யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி, மேல்மாடி மண்டபம்.

31 - 05 - 98 ஞாயிறு மாலை 5. 00 மணி (புதிய நேரம்) தொடங்கி 7. 00 மணி வரை

அருட்தந்தை யூஜின் பிரான்சீஸ்

(56376)



JAFFNA COLLEGE

175 th ANNIVERSARY CELEBRATIONS

SPORTS CARNIVAL

TO ALL SPORTS LOVERS, WELL WISHERS AND PARTICIPANTS

MATCHES COMMENCE ON 30 - 05 - 1998 Saturday.

Draws available at:

Jaffna College Undergraduate, Dept. Hospital Road, Jaffna.

Jaffna College, Vaddukoddai.

Note: Competitors Must Report 15 Minutes Before Schedule

- N. THATPARANANTHAN

Coordinating Secretary

(56383)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

புங்கங்குளம்

# வில்லையடி நாகபூஷணி அம்பாள் வருடாந்தப் பொங்கல் விழா சிறப்பிதழ்

29 - 05 - 1998

# பொங்கி அருள் சுரக்கும் புதுமை அன்னை

வில்லை மரத்தாளை வெவ்வினைகள் களைவாளை
அல்லும் பகலுமெங்கள் தொல்லையற அருள்வாளை
பொல்லா வினையகலப் புங்கங்குளத்தூர் புகுந்து
கல்லும் கசிந்துருகப் பாபிநாம் பணிந்திடுவோம்!

பக்திப் பெருக்கும் தெய்வீக அம்சங்களும் நிறைந்து விளங்கும் பல ஆலயங்கள் யாழ். குடாநாட்டிற்கு பல பாகங்களிலும் திலகமிட்டிருப்பதை நாம் அனைவரும் அறிவோம். நாட்டின் அமைதியற்ற சூழ்நிலைகள் காரணமாக பல திருத்தலங்களின் திருவிழாக்களும், பூசைகளும் வேறு வேறு இடங்களில் நடைபெறுவதும் அடியார்களின் நேர்த்திக் கடன்கள் வேறு வேறு ஆலயங்களில் நிறைவேற்றப்படுவதுவும் நம் பிரதேச வழக்கமாகி விட்டது!

இந்த வகையிலே யாழ். குடா நாட்டின் புங்கங்குளப் பகுதியில் தோன்றி அருள் பாலிக்கும் அம்மன் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் அருள் ஆட்சியேயாகும். ஆனால் இவ்வம்மனின் புங்கங்குள அருட்தோற்றம் நாட்டின் நிலையினால் ஏற்பட்ட தொன்றன்று. இற்றைக்கு சுமார் 32 வருடங்களுக்கு முன்னரே அம்பாளின் அருட்பார்வை இவ்விடத்திலே தோன்றியிருப்பதை அடியார்கள் அறிந்து கொள்வார்கள்!

அழகிய பெருந்தெரு. அதனை அண்டியிருக்கும் ஒரு புனிதமான குச்சொழுங்கை. அறிவும், ஆற்றலும், தெய்வீகமும் நிரம்பியிருக்கும் மக்கள் சூழ்ந்த அயல். இத்தனைக்கும் நடுவிலே அமைந்திருக்கும் அற்புத மரத்தோப்புகள். இதிலே உயர்ந்து ஓங்கி வளர்ந்திருக்கிறது அம்மனுக்கு பிடித்தமான ஓர் வில்வமரம். இந்த மரத்தின் அடியிலேதான் அம்பாளின் வதிவிடம் தென்படலாயிற்று. அக்காலத்தில் இந்தவளவுக்குள் குடியிருந்த அடியவர்கள் அம்மனின் அருளையும் அருட் தோற்றத்தையும் அற்புதங்களையும் பல தடவைகள் கண்டு வியந்து தெய்வீக மேலீட்டினால் அந்த இடத்திலே சிறியதோர் ஆலயத்தை அமைத்து ஆதரிக்க முற்படலாயினர். காலப்போக்கிலே அயலவர்களும் அண்டி வாழ்பவர்களும் அம்பாளின் அற்புதங்களினால் அம்பாள் அடியார்களாயினர். யாழ். நகரிலே புங்கங்குளப் பகுதியிலே வில்லை மரத்தடியிலே அம்பாளின் வதிவிடம் மிகச் சிறியதானாலும் அம்பாளின் அற்புதங்களினால் இவ்வாலயம் தெய்வீக நிலையினால் மிக மிக மேலோங்கியுள்ளது குறிப்பிடத்தக்க விடயம்.



இவ் ஆலயத்துக்குள் பிரவேசித்ததும் அடியார்களுக்கு ஏற்படுகின்ற உணர்ச்சிவச நிலை அம்பாளை தரிசிக்க வரும் போது காணக்கூடிய அற்புதக்காட்சிகள். அம்பாளுக்கு பூசைக்காக அடியார்கள் கொண்டுவந்து வைக்கின்ற பால், பழங்கள் மலர்கள் மறைந்து விடுகின்ற தன்மை. அடியார்களின் நடமாட்டம் இல்லாத போது இங்கே நடக்கின்றதோர் இனந்தெரியாத தெய்வீக நடமாட்டம், அம்பாளுக்குச் செய்கின்ற நேர்த்திக்கடன்களினால் நோய், பிணி, தோசங்கள் நீங்கிடும் தன்மை, அத்தனைக்கும் மேலாக அம்பாளுக்கு முன்னால் வளர்க்கப்பட்டிருக்கும் தீர்க்குளம்பின்மேல் அடியார்கள் ஆரவாரமின்றி அமைதியாக நடந்து செல்லும் தெய்வீகம் என்பன அம்பாள் இவ் ஆலயத்திலே விரும்பி உறைகின்ற தன்மையை வெளிப்படுத்துகின்றன.

அம்பாளின் வருடாந்த பொங்கல் தினம் இன்று வெள்ளிக்கிழமையாகும். அடியார்கள் அனைவரும் யாழ். நகரின் புங்கங்குளம் பகுதியிலே வில்லையடியிலே அமர்ந்து அருள் பாலிக்கும் நயினை நாகபூஷணி அம்பாளின் அருட் பெருந்தோற்றத்தை அணுகி பேரருள் பெற்று உய்வார்களாக

'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'


அருள் சுரக்கும் புதுமை அன்னை அருள் வேண்டுவோர்:

ஆலயங்களுக்குத் தேவையான பட்டுத்துணிகள் மற்றும் பட்டுவேட்டிகள், சாறிகள் ஆகியவற்றுக்கு நாட வேண்டிய இடம்:
**அஜந்தாஸ் ,ரெக்ஸ்ரைல்ஸ்**
54, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

மிதிவெண்டி, மிதிவண்டி உதிரிப்பாகங்கள் மற்றும் மின்சார உபகரணங்கள், றேடியோ, ரி. வி. டெக் ஆகியவற்றைப் பெறுவதற்கு உடன் நாடவேண்டிய இடம்:
**சிவாஸ் சென்ரர்**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

★ நித்தம் நித்தம் புத்தம் புதிய டிசைன் நகைகளை அறிமுகப்படுத்துபவர்கள்
**சிறி அமலா நகைமாடம்**
74/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

★ காலத்தின் தேவைக்கேற்ப நவநவமான டிசைன் நகைகளை மங்கையர் மனங்களில் ரீங்காரம் செய்யும் வகையில் செய்து தருபவர்கள்
**சோபனா நகைமாடம்**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நவீன மிக்சர் கமரா மூலம் அதி நுட்பமான முறையில் நிகழ்ச்சிகளை தயாரித்து விழாவினை மேன்மேலும் மெருகூட்டுபவர்கள். பழைய புதிய படப் பாடல்களை DISC ஒலி இழையிலிருந்து நேரடியாக Stereoவில் பதிவு செய்து பெற்றிட
''சுப்ப ஸோ வீடியோ''
**ரவி ஒளி கானம்**
100A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**முருகன் ஸ்ரோர்ஸ்**
உத்தரவு பெற்ற வியாபாரிகளும் சமிஷன் ஏஜெண்டுகளும் விநியோகஸ்தர்கள்:
டுபாக்கோ கொம்பனி லிமிட்டெட்
மலிபன் பிஸ்கெட் லிமிட்டெட்
27, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தங்க நிறமென்றாலே தனி மௌசுதான் அதிலும் ''சிறி நதியா''வின் நகைகளை அணிந்த பெண்ணுக்கு எவ்வளவு பெருமை!
**சிறி நதியா நகைமாடம்**
2G, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

நகை உலகில் இன்று புதிய டிசைன் நகைகளை அறிமுகப்படுத்துபவர்கள்:
**சிறி மீனாச்சி ஜுவல்லர்ஸ்**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**புதிய முருகன் வணிக நிலையம்**
(நியூ முருகன் றேடர்ஸ்)
58P, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்

**சிறி சிவா றேட்ஸ்**
மிதி வண்டி மற்றும் உதிரிப்பாக விற்பனையாளர்
72, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

★ ஒளிச்சுடர் விடும் பளிச்சிடும் நகைகளுக்கு
**சானுகா நகைமாடம்**
198H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

★ அவசர தேவையுணர்ந்து ஓடர்களை உடனுக்குடன் செய்து பெற்றிட
**நந்தினி நகைமாடம்**
218H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

துரித கதியில் உங்கள் கலர்ப்படச் சுருளை கழுவிப் பெற்றிட யாழ். நகரில்!
**சுப்பஸோ கலர்ப் படச்சேவை**
100A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/3843)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஜி. சீ. ஈ. பரீட்சை முடிவுகள்

# 27.5 சத வீதமானோரே உயர்தரம் பயிலத் தகுதி

கொழும்பு, மே 29

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜி. சீ. ஈ. (சாதாரண தர)பரீட்சையில் நாடு முழுவதும் 27.5 சத வீத மானவர்களே உயர்தரத்தில் பயில தகுதி பெற்றுள்ளனர் என பரீட்சை ஆணையாளர் நாயகம் ஏ. ஆர். பி. அமரக்கோன் தெரிவித்தார்.

இப்பரீட்சை முடிவுகள் நேற்றுப் பிற்பகலில் கொழும்பில் பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்பட்டன.

ஏனைய மாவட்டபரீட்சை முடிவுகள் தபாலில் சேர்க்கப் பட்டுள்ளன.

பரீட்சை முடிவுகளின்படி பரீட்சை ஆணையாளர் தெரிவித்த முக்கிய தகவல்கள் வருமாறு:-

★ இப்பரீட்சையில் 1255 பாடசாலைப் பரீட்சார்த்திகள் எட்டுப் பாடங்களிலும் அதி விசேட சித்தி பெற்றனர்.

★ இப்பரீட்சையில் தோற்றிய 5 லட்சத்து 87 ஆயிரத்து 400 பேரில் 3லட்சத்து 73 ஆயிரம் பேர் பாடசாலைப் பரீட்சார்த்திகள். இவர்களில் 22 ஆயிரத்து 282 பேர் ஒரு பாடத்திலும் சித்தியடையவில்லை. (இ-3-6)

## யாழ். மாவட்டத்தில் 120 இளைஞர் கழகங்கள்

யாழ்ப்பாணம், மே 29

யாழ். மாவட்டத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஆதரவில் 120 இளைஞர் கழகங்கள் இயங்கி வருகின்றன. அத்துடன் பிரதேச சபைகளிலுள்ள இளைஞர் கழகங்கள் இணைந்து 10 இளைஞர் கழக பிரதேச சம்மேளனங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

தேசிய மொழிப் பயிற்சித் திட்டத்தின் கீழ் இருபாலை, மயிலணி, சங்கானை, பருத்தித்துறை, கொடிகாமம் போன்ற பகுதிகளில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால ஆங்கில மொழித் திறன் பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது.

ஆறு மாதங்களுக்கு நடைபெறும் இப்பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு அகில இலங்கை ரீதியில் பொதுப்பரீட்சை நடத்தப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இதேவேளை —

அரியாலை, கதிரிப்பாய், பருத்தித்துறை போன்ற இடங்களில் பெண்களுக்கான பயிற்சி நெறி ஒன்றும் மேற்படி மன்றத்தினரால் நடத்தப்படுகிறது. [ஐ-5]

## கண்டிவீதியில் மதகுகள் புனரமைப்பு

அரியாலை, மே 29

அரியாலை கண்டி வீதியில் உள்ள மூன்று பிரதான மதகுகள் புனரமைக்கப்பட்டுவருகின்றன.

கண்டிவீதியில்புங்கன்குளம் சந்திக்கு அண்மையிலும், தபால்கட்டை சந்திக்குஅண்மையிலும், நெடுங்குளம் சந்திக்கு அண்மையிலும் உள்ள பிரதான மதகுகளே புனரமைக்கப்பட்டு வருகின்றன. (ஐ-17)

## பிரியாவிடை வைபவம்

மல்லாகம் ஆரம்ப நீதிமன்றத்தில் பதில் பதிவாளராக கடமையாற்றிய சி. சந்திரலிங்கம் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்திற்கும், புத்தகம் கட்டுனர் கே. ராஜரத்தினம் சாவகச்சேரி நீதிமன்றத்திற்கும் இடமாற்றம் பெற்றுச் செல்வதையொட்டி இவர்களுக்கு ஆரம்ப நீதிமன்ற ஊழியர்களினால் பிரியாவிடை வைபவம் ஒன்று நடத்தப்பட்டது.

மல்லாகம் நீதிமன்றத்தில் இடம் பெற்ற இவ் வைபவத்தில் நீதிவான் மு. திருநாவுக்கரசு உட்பட பலர் உரையாற்றினார்கள். (ஐ-5)

## உதவும் நாடுகளின் நிதி அபிவிருத்திக்கு மட்டுமே

### போருக்கு அல்ல என்கின்றார் பீரிஸ்

கொழும்பு, மே 29

இலங்கைக்கு உதவும் நாடுகள் வழங்கியுள்ள நிதி யுத்தத்துக்குப் பயன்படுத்தப்பட மாட்டாது என்று பிரதிநிதி அமைச்சரும், நீதி அரசமைப்பு விவகார அமைச்சருமான பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் பி.பி.ஸிக்கு தெரிவித்தார்.

உதவும் நாடுகள் வழங்கும் நிதி அபிவிருத்திக்கு மட்டுமே செலவிடப்படும். யுத்தத்துக்குத் தேவையான நிதி வரி மற்றும் வழிகளிலும் சேகரிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10-3)

## பாராட்டு விழா

அரியாலை, மே 29

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் ஆரம்பகால உறுப்பினர்களைக்கௌரவிக்கும் பாராட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நிலைய செயலாளர் சச்சிதவநேசன் தலைமையில் நடைபெற்றது.

நிலையத்தின் ஆரம்பகால உறுப்பினர்களான யோ. தேவசகாயம், அ. சுப்பிரமணியம ஆகியோருக்கு நிலைய உப தலைவர் ஏ. ரட்ணகுமார், ச. சந்தியானந்தசிவம் ஆகியோர் பொன்னாடை போர்த்தி பரிசில்கள் வழங்கி கௌரவித்தனர். [ஐ-17]

## போரூட் நிறுவனத்தின் அபிவிருத்தித் திட்டங்கள்

யாழ்ப்பாணம், மே 29

போரூட் நிறுவனம் யாழ். மாவட்டத்தில் இந்த ஆண்டு பல திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.

மக்கள் மீளக் குடியேறிய பகுதிகளில் கிணறு அமைத்தல், சிறுவீடுகள் அமைத்தல், பாடசாலைகளைத் திருத்துதலுட்பட பல திட்டங்களை போரூட் நடைமுறைப் படுத்தவுள்ளது.

இது தொடர்பாக நேற்று யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கத்தை அவரது அலுவலகத்தில் சந்தித்து போரூட் நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். (இ-5)

## மாவட்ட தகவல் பணியகம்

யாழ்ப்பாணம், மே 29

வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக் கட்டடத்தில் இயங்கிவரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் மாவட்டத் தகவல் பணியகம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பணியகம் மூலம் தொழில் பயிற்சி வழி காட்டல், தொழில் வழி காட்டல் உளவள ஆலோசனைகள் போன்றவை இளைஞர் சமுதாயத்துக்கு வழங்கப்படவுள்ளன.

மூன்று மாதத்துக்கு ஒரு தடவை இளைஞர் வழிகாட்டிப் பிரசுரம் ஒன்று இப்பணியகத்தினால் வெளியிடப்படும். (இ-5)

## வீடமைப்புக் கடன்

வீடமைப்பு அதிகார சபை யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் தலா 100 பேருக்கு வீடமைப்புக் கடன் வழங்குவதற்கு நடவடிக்கையை எடுத்துள்ளது.

நடுத்தரவருமான முடையவர்களுக்கு இக்கடனுதவி வழங்கப்படும்.

பிரதேச செயலாளர்களின் சிபார்சுடன் 20 ஆயிரம் ரூபா உதவியாக வழங்கப்படுகின்றது.

விண்ணப்பதாரர் ஒருவருக்கு 4 தவணைகளில் வீடமைப்பு கடனுக்கான நிதி வழங்கப்பட்டு ஆறுமாதத்துக்கு பின்னர் அறவீடு செய்யப்படும்.

இவ்வருடம் 274 பேருக்கு இககடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இக்கடனை மீளச் செலுத்தி முடிப்பதற்கான காலஎல்லை 10 வருடங்களாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## அறணை கடிக்கவில்லை

யாழ்ப்பாணம், மே 29

பண்டத்தரிப்பைச் சேர்ந்த தேவதாஸ் மரியலீலா என்பவரது மரணம் சம்பந்தமாக 13-3-1998 உதயனில் வெளிவந்த செய்தியில்—

அவருக்கு அறணை கடித்ததாக குறிப்பிடப்பட்டிருந்த மேலதிக தகவல் சரியானதல்ல என்று—அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பாடசாலையில் தீ விபத்து

யாழ்ப்பாணம், மே 29

யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் தமிழ்ப் பாடசாலையின் கொட்டகை ஒன்றில் நேற்று முன்தினம் தற்செயலாக ஏற்பட்ட தீ விபத்தினால் ஒரு பகுதி எரிந்து நாசமானது.

அப்பாடசாலை வளவில் இருந்த குப்பை கொளுத்தப்பட்டு எரிந்து கொண்டிருந்த சில நிமிட நேரத்தில் கிடுகால் வேயப்பட்டிருந்த நாட்டிய அறைப் பகுதியில் தீப்பற்றிக் கொண்டது. இதனால் அப்பகுதியெங்கும் புகைமண்டலமாய் காட்சி அளித்ததுடன் தீயும் சுடர் விட்டு எரியத் தொடங்கியது.

இளைஞர்கள் சிலர் பாடசாலைக் கூரை மீது ஏறி அப்பாடசாலை மாணவிகளின் உதவியுடன் தண்ணீர் ஊற்றி தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். (இ-100-15)

### வீடமைப்பு அதிகாரசபை:

# குடியிருப்பவர்களுக்கு 25 சதவீத கழிவுடன் வீடு

யாழ்ப்பாணம், மே 29

வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான வீடுகளில் வதியும் அனுமதிக்கப்பட்ட குடியிருப்பாளர்கள் வீடுகளுக்கான மொத்தப் பெறுமதியை எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் ஒரேயடியாகச் செலுத்தினால் வீட்டின் பெறுமதியில் 25 சதவீதம் கழிவு வழங்கப்படும் என்று வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மாவட்ட முகாமையாளர் எஸ். மாசிலாமணி தெரிவித்துள்ளார்.

வீடமைப்புத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கடன் நிலுவைகளை முற்றாகச் செலுத்துபவர்களுக்கு 10 சதவீத கழிவும் வழங்குவதோடு உறுதிகளும் சம்பந்தப்பட்ட ஆவணங்களும் யாழ். அலுவலகத்தில் வைத்து ஓரிருநாள்களிலேயே வழங்கப்படும்.

வீடமைப்பு அதிகாரசபையிலும், வீடமைப்பு திணைக்களத்திலும் கடன் பெற்று கட்டிய வீடுகள் கடந்த காலவன் செயல்களின் போது முற்றாக அழிக்கப்பட்டிருப்பது சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் உறுதிப்படுத்தப்பட்டால் வீடு சேதமாக்கப்பட்ட காலத்திற்கு பின்னுள்ள மீள் கொடுப்பனவுகளை விலக்கி விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-5)


யாழ்ப்பாணம்

**சேக்கிழார் கழகம் நடத்தும் சேக்கிழார் விழா**

இடம்: நல்லை ஞானசம்பந்தர் ஆதின கலாமண்டபம்

காலம்: 1998-05-30 சனிக்கிழமை காலை 8.30 மணி (பழைய நேரம்)

தலைமை: செல்வன் வி. செந்தில்குமரன் (தலைவர், யாழ். சேக்கிழார் சழகம்)

மங்கள விளக்கேற்றல்: திரு. க. சிவாஜி (அதிபர், யா/ ஸ்கந்தவரோதயா கல்லூரி)

திருமுறை ஓதல்: செல்வன் ஏ. அனுசாந்தன் (மாணவன், யாழ். பல்கலைக்கழகம்)

வரவேற்புரை: செல்வன் கு. பாலஷண்முகன் (செயலாளர், யாழ். சேக்கிழார் கழகம்)

ஆசியுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் (இரண்டாம் குருமகா சந்நிதானம், நல்லை ஆதீனம்)

வாழ்த்துரை: திரு. து. வைத்திலிங்கம் (மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

பிரதம விருந்தினர் உரை: அன்னை 'துர்க்கா துரந்தரி' செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

சிறப்பு விருந்தினர் உரை: திரு. க. சிவராமலிங்கம் B.A, திரு. ஆறு. திருமுருகன் B.A

சிறப்புரை: பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் (தலைவர் இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக் கழகம்)

இயல்: ''பெரியபுராணம்'' இளைஞர் உரையரங்கு

தலைமை: பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணியன் (தலைவர், தமிழ்த்துறை யாழ். பல்கலைக் கழகம்)

இசை: பெரிய புராண இசையரங்கு பாட்டு மாணவர்கள் யாழ். இந்துக் கல்லூரி

நாடகம்: ''மன்பதைக்கு நீதிசொன்ன மனுச்சோழன் மாண்பு''

நன்றியுரை: செல்வன் வெ. ஜெகதீஸ்வரன் (உப செயலாளர், யாழ். சேக்கிழார் கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பூ. சுகந்தன்,
விழா அமைப்பாளர்,
யாழ். சேக்கிழார் கழகம்.

(56362)



சேக்கிழார் குருபூசைதின விழா

**சிறப்புற வாழ்த்துவோர்**

★ கல்யாணி கிறீம் ஹவுஸ்
★ ராஜா திரையரங்கு
★ லிங்கம் கிறீம் ஹவுஸ்
★ சாரங்கா நகைமாடம்
★ இ ச பேரம்பலம் சகநிறுவனம்

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கௌரி அழகு மாடம்
பெஷன் ஹவுஸ்
ஜெயம் நகைத் தொழிலகம்

கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

இவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்

(56363)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடு விற்பனைக்கு

உரும்பிராய் வடக்கு, கற்பக விநாயகர் ஆலய வீதியில் விநாயகர் களஞ்சியத்திற்கு முன்புறத்தில் எல்லா வசதிகளுடனும் அமைந்த வீடு, கடை 23/4 பரப்பில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: ந. செல்லையா, உரும்பிராய் வடக்கு. [56346]

## விற்பனைக்கு

பாவிக்காத நல்ல நிலையில் உள்ள சைனா வயலின் விற்பனைக்குண்டு. ஞாயிறு தவிர்ந்த மற்றைய நாள்களில் பார்வையிடலாம். தொடர்பு: 499/1, பருத்தித்துறை றோட், நல்லூர். [56338]

## தவறிவிட்டது

சிறி மோகனாம்பிகை என்பவருடைய தேசிய (656522623V), விசேட அடையாள அட்டைகள், சாவகச்சேரி பாஸ் என்பன நாவற்குழிக்கும் கோயிலாக்கண்டிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கைதடி நாவற்குழி தெற்கு, கைதடி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். [56360]

வேலன் ஜெகதீஸ்வரன் என்பவரது தேசிய (743283490v), விசேட (0905000509) அடையாள அட்டைகள் கண்டி வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேகாஸ் வீடியோ சென்ரர், அரியாலையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [56364]

## காணவில்லை

பிறவுண் நிற நல்ல இன பசுக்கன்று ஒன்றைக் காணவில்லை. பசுக்கன்றைக் கண்டவர்கள் எம்மிடம் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். பா. அமுதன் ஐயா, கற்பகப்பிள்ளையார் கோயில், இருபாலை, கோப்பாய். [சி/3859]

## கோழிக்குஞ்சு விநியோகம்

ஒரு நாள் புறோயிலர் குஞ்சுகள் வியாழன் மாலையும் வெள்ளி, சனிக்கிழமையும் விநியோகிக்கப்படும். தேவையானோர் பெற்றுக்கொள்ளவும். ''மல்லிகாபதி' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். [56336]

## இலகு திருமணசேவை

1968 Bank, 1966 Bank, 1970 Bank, 1968 B. Com விகிதர், 1954 Germany, 1958 Holland. இவர்களுக்கு மணப்பெண்கள் தேவை. தொடர்பு: ஞாயிறு காலை துரைவிமலா 958/8, கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். [56359]

## திருமணசேவை

எங்களிடம் 63 ஆம் ஆண்டு கார்த்திகை நட்சத்திரமுடைய செவ்வாய்க் குற்றமுள்ள மணமகனுக்கு 59 ஆம் ஆண்டு ரேவதி நட்சத்திரமுடைய செவ்வாய்க் குற்றமற்ற மணமகன்களுக்கு மணப்பெண்கள் தேவை. குறிப்பு, புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும்: துர்க்கா திருமணசேவை, இல. 178, நாவலர் றோட், யாழ்ப்பாணம். [56363]

# அர்த்த மண்டபம் அமைப்பு

யாழ்ப்பாணம், மே 29

வண்ணார்பண்ணை அருள்மிகு ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி – (பன்றிக் கோட்டுப்பிள்ளையார்) கோயிலில் புதிதாக அர்த்த மண்டபம் அமைக்கப்பட்டு வருகிறது. (ஐ–8)

---

அச்சுவேலி நாவலம்பதி

## காட்டுமலைக் கந்தசுவாமி கோயில்

# வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம்

விசேட உற்சவங்கள்

30-05-98 கொடியேற்ற உற்சவம் காலை 10 மணி

03-06-98 உருத்திரநாயகி அம்மாள் உற்சவம் மாலை 4 மணி

08-06-98 வைகாசி விசாக உற்சவம் காலை 10 மணி
மஞ்ச உற்சவம் மாலை 4 மணி

13-06-98 அமிர்தவல்லி சுந்தரவல்லி உற்சவம் மாலை 4 மணி

17-06-98 தெண்டாயுதபாணி உற்சவம் காலை 10 மணி
(மாம்பழத் திருவிழா)

21-06-98 கார்த்திகை உற்சவம்
சப்பறத் திருவிழா மாலை 4 மணி

22-06-98 இரதோற்சவம் காலை 10 மணி
சங்காபிஷேகம் மாலை 4 மணி

23-06-98 தீர்த்தோற்சவம் காலை 10 மணி
திருஊஞ்சல் மாலை 4 மணி

24-06-98 பூங்காவன உற்சவம்
திருக்கல்யாணம் மாலை 4 மணி

25-06-98 வைரவர் உற்சவம் மாலை 4 மணி

சீ. சிவகுரு ஐயர்
ஆலயதர்மகர்த்தா

காட்டுமலை வீதி,
அச்சுவேலி.

(56339)

---

# 4 ஆம் மாத நினைவுப் பூக்கள்

அமரர்

## தங்கராசா சுரேந்திரன்

(தம்பசிட்டி, பருத்தித்துறை)

ஆவிபிரியா அருளுருவே என்னாவி சுமந்துயர்
நாவில் வற்றா ஆரமுதே தெய்வீக நட்புயிரே
தூவி மலர் சூட்டுகின்றேன். தங்கச் சுரேந்திரனே
காவிலுயர் நாடுகவின் பெற நீ வாழி வாழி!

நண்பன்
ச. சி. சிவப்பிரகாசம்

அம்சன் ஒளியகம்,
நெல்லியடி

(56256)

---

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



## திருமதி ஞானரத்தினம் கனகரத்தினம்

அன்னை மடியில் 05 – 02 – 1918

ஆண்டவன் அடியில் 29 – 05 – 1997

ஓராண்டு சென்றதுவே அம்மா!
உங்கள் பாசமுகம் காணாது
ஊமையாய் அழுகின்றோம்
உங்கள் இனிய குரல்கேளாது
எங்கள் இதயங்கள் ஏங்கித்தவிக்கின்றதே
உங்கள் பிரிவுத்துயர் தாங்காது
எங்கள் துயர் துடைக்க
ஓடிவாருங்கள் அம்மா!

உங்கள் பிரிவால் துவண்டிருக்கும்:
பொ. கனகரத்தினம் J.P. (கணவர்),
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் புட்டன்.

நிம்மதி
தேவாலய வீதி,
சங்கானை.

(56303)

---

யா/ கனகரத்தினம்
மத்திய மகா வித்தியாலயம்
க.பொ.த (உயர் தரம்)

# 2000 ஆம் ஆண்டுக்கான அனுமதி

கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய நான்கு பாடத்துறைகளுக்கும் விண்ணபபம் கோரப்படுகிறது.

விண்ணப்ப முடிவு திகதி: 05-06-1998

வி. மாணிக்கம்
அதிபர்

(56365)

---

அரியாலை
(நீர்நொச்சித்தாழ்வு)

## ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான

கும்பாபிஷேக தின

# சங்காபிஷேகம்

ஷை சங்காபிஷேகம் 29—05—98 வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும்.

மாலை 4 30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று பஞ்சமுக விநாயகர் பூந் தொட்டியில் விசேட மேளக் கச்சேரியுடன் வீதி உலா வருவார்.

அடியார்கள் விநாயகப் பெருமான் அருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

தர்மசண்ஸ்
உபயகாரர்.

(56331)

---

# O/L DAY CLASSES

திங்கள் – வெள்ளி

(காலை 8. 30 முதல் பிற்பகல் 1. 30 வரை)

★ எமது வழமையான விசேட ஆசிரியர் குழு
★ கட்டொழுங்குடன் கூடிய கல்வி
★ இவ்வகுப்பிற்கும் விசேட கணித வகுப்பு

**வரதன் ஆசிரியரால் நடத்தப்படும்.**

**யூன் முதல் வாரத்தில் ஆரம்பமாகிறது.**

உங்கள் பெயர்களை முன்னரே பதிவுசெய்து இட நெருக்கடியைத் தவிர்த்துக் கொள்க.

The Express Institute
IRUPALAI KOPAY
– அதிபர்

[56358]

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27 | 09 |
| 02 | 06 |
| 1931 | 1997 |

உரும்பிராய் தெற்கு

## திருமதி சரஸ்வதி சபாரத்தினம்

அன்பின் சிகரமாக பண்பின் உறைவிடமாக எங்கள் வாழ்க்கையில் கலங்கரை விளக்காகத் திகழ்ந்த அன்புத்தெய்வமே!

உங்கள் பிரிவு எமக்குச் சொல்லொணாத்தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது. நாங்கள் உங்கள் நினைவாகவே இருக்கின்றோம்! என்றும் இருப்போம்!

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்!

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

(56366)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்



# உதயன்

## பரீட்சை முடிவு

இலங்கைக் கல்வி முறையில், இடைநிலைக் கல்வியின் தகுதி காண் மட்டமாக விளங்கும் ஜி. சீ. ஈ. சாதாரணதர வகுப்பின் சென்ற ஆண்டுப் பரீட்சை முடிவுகள் இம்முறை மிகவும் பிந்தி இப்போதே வெளிவந்திருக்கின்றன.

பரீட்சை ஆணையாளரின் தகவலின் பிரகாரம் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 27.5 சத வீத மாணவர்களே உயர்தர வகுப்பில் கல்வி பயிலத் தகுதி பெற்றிருக்கின்றார்கள்.

இந்த மதிப்பீடுகள் பொதுவாகவே மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சி கண்டு வருகிறது என்பதனைச் சுட்டி நிற்கின்றன.

நாட்டில் அமுல் செய்யப்படும் கல்வி முறையும் அதற்கான திட்டங்களும், போதனை முறைகளும் மாணவர்களுக்குச் சராசரிக் கல்வி அறிவைப் புகட்டுவதில் தோல்வி கண்டு வருகின்றன என்பதனையே பரீட்சைப் பெறுபேறுகள் தொட்டுக் காட்டுகின்றன.

அந்தப் பொது நிலை ஒரு புறமிருக்க—

யாழ்ப்பாண மாணவர்களின் பெறுபேறுகள் இம்முறையும் திருப்திகரமானதாக இல்லை என்று கணிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான மாணவர்கள் சாதாரண தரப் பரீட்சையில் சித்தி அடையும் தகுதி பெறவில்லை என்பது கல்விப்போதனை எந்தளவு கீழிறங்கி உள்ளது என்பதனைக் காட்டுகிறது.

பிள்ளைகள் — மாணவர்கள்—பாடசாலையும் 'ரியூட்டரியும்' என்று நாளாந்தம் ஓடி ஓடிக் களைத்துப் போகிறார்கள். அந்த முயற்சிக்கு ஏற்றபலன் கிடைக்கவில்லை. இது பரந்த அளவில் ஆராயப்பட வேண்டிய ஒன்று.

கல்வியே கருந்தனம் என்று கருதி அதனை யாழ்ப்பாண மக்கள் எப்போதும் தேடித் தேடிப் பெற்றவர்கள். கல்விப் போதனையை ஒரு மகத்தான தொண்டாகக் கருதி தங்களை அர்ப்பணித்து, மனம் வைத்துப் போதித்தார்கள் அக்காலத்து ஆசிரியர்கள்.

'ரியூட்டரி'யில் பயில்வது நாகரிகம், உயர்வானது என்றுஇப்போது கருதப்படுவது போல, கல்வியும் வர்த்தகமயப்படுத்தப்பட்டு விட்டது. முந்திய சந்ததியினர் குறைந்த பணம் செலவிட்டு நிறைந்த கல்வி அறிவைப் பெறக் கூடியதாக இருந்தது. ஆனால் இப்போது அதிக பணம் செலவிட்டு சராசரிக் கல்வியையும் பெற முடியவில்லை.

பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவரும் போது மட்டும் கல்வித்தரம் குன்றுதல், புகட்டுதலில் குறைபாடு என்பன குறித்துப் பிரஸ்தாபிப்பதும், கவலைப்படுவதும் வழக்கம். ஆனால் இவற்றை நிவர்த்தி செய்வது குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை.

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் பெற்றோர்கள், கல்விமான்கள், சமூக நலன் விரும்பிகள் இது விடயத்தில் கவனத்தைச் செலுத்தி சரிவை நிமிர்த்தி விட நடவடிக்கை எடுக்க வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் இதில் கவனம் செலுத்தவில்லையெனில் சரியும் கல்வித்தரம் ஒரேயடியாக வீழ்ந்து படுத்துடும் ஆபத்து உண்டு.

# பிரணவத்தின் சொரூபமாக இருந்து விக்கினம் தீர்க்கும் விநாயகர்

ஈழ நாட்டின் தனிச்சிறப்பு எங்கு பார்த்தலும் பிள்ளையார் கோவில்கள் இருப்பதேயாகும். கோவில் என்று பெயர் வைத்து விமானமும் கூரையும் போட்டு, கட்டடம் எழுப்ப வேண்டும் என்பது கூட இல்லாமல் அரச மரத்தடிகளிலே கூட வானம் பார்க்க அமர்ந்திருக்கும் நமது பிள்ளையார் குளத்தங்கரைகளிலும் குடி கொண்டிருக்கிறார். எந்த இடங்களில் இருந்தாலும் அவரைப் பிள்ளையார் என்று அன்போடு கூறுவதே நம் நாட்டுக்கே உரிய வழக்கம் சர்வலோக மாதா, பிதாவாகிய பார்வதி பரமேஸ்வரனின் மூத்த புத்திரர் அவர்.

சைவப்புலவர்
செ பரமநாதன்

'' பிள்ளை '' என்றால் அவரைத்தான் குறிக்கிறது. வெறுமே '' பிள்ளை '' என்று சொல்லக் கூடாது என்பதால் மரியாதையாகப் '' பிள்ளையார் '' என்று சொல்வது நம் நாட்டுச் சிறப்பு.

முதல் பிள்ளை இவர் ஆனாலும் இவரே எல்லாவற்றுக்கும் ஆதியில் இருந்தவர். பிரணவம்தான் எல்லாவற்றிற்கும் முதல். பிரணவத்திலிருந்து தான் சகல பிரபஞ்சமும், சீவராசிகளும்

**ஞானக் கதிர்**

தோன்றின. அந்தப் பிரணவத்தின் சொரூபமே பிள்ளையார். அவரது ஆனை முகம், வளைந்த தும்பிக்கை இவற்றைச் சேர்த்துப் பார்த்தால் பிரணவத்தின் வடிவமாகவே தோன்றும்.

குழந்தையாக இருந்து கொண்டே ஆதிமுதலின் தோற்றமாக இருக்கிற பிள்ளையார் குழந்தை போல் தோன்றினாலும் பக்தர்களை ஒரேயடியாகக் கை தூக்கி உயர்த்தி விடுவதிலும் முதல்வராக இருக்கிறார் என்பதற்கு ஔவைப் பாட்டி ஒருத்தியின் உதாரணமே போதுமானது. ஔவையார் பெரிய கணபதி விசுவாசியாவார். பிரணவ சொரூபியான விநாயகரைத் தியானித்துக் கொண்டு ஔவையார் யோக சாத்திரம் முழுவதையும் அடக்கியதான விநாயகர் அகவலைப் பாடியிருக்கிறார்.

எந்தத் தெய்வத்தை வணங்கினாலும் விநாயகருடைய அனுக்கிரகத்தைப் பெற்றுக் கொண்டால்தான் அந்தக் காரியம் விக்கினம் இல்லாது நடைபெறும். அவரையே முழுமுதற் கடவுளாக, பிரதான மூர்த்தியாக வைத்து உபாசிக்கின்ற மதத்திற்கு காணபத்தியம் என்று பெயர்.

விக்னேசுவரருடைய அனுக்கிரகம் இருந்தால்தான் உலகத்தில் எந்தக் காரியமும் தடையின்றி நடக்கும். தடைகளை நீக்கிப் பூரண அனுக்கிரகம் செய்கின்ற அழகான குழந்தைத் தெய்வம் பிள்ளையார். அவரைப் பிரார்த்தித்து பூசை செய்து நாம் விக்கினங்கள் இன்றி நல்வாழ்வு வாழ்வோமாக!

★

## வினோத வரம்

பாண்டவர்களின் தாய் குந்திதேவி. கண்ணனிடம் மாறாத அன்பும், தீராத பக்தியும் கொண்டிருந்தாள். தன்னிடம் அன்பும், பக்தியும் வைத்துள்ள குந்திதேவிக்கு ஏதேனும் அருள் செய்ய நினைத்தான் கண்ணன். அதனால் ஒரு நாள் அவள் முன்தோன்றி, '' நீ விரும்புகின்ற ஒரு வரம் கேள். அது எதுவானாலும் தருகிறேன் '' என்றான். குந்திதேவி நீண்டநேரம் சிந்தித்தாள். '' கண்ணா! நாள் தோறும் எனக்கு ஏதேனும் துன்பம் வரவேண்டும். இதுதான் நான் உங்களிடம் கேட்கும் ஒரே வரம் '' என்றாள்.

இதைக்கேட்ட கண்ணன் வியப்பு அடைந்தான். '' என்னிடம் பலர் நீண்ட ஆயுள், செல்வம் இவை போன்ற பிற பேறுகளைத்தான் வரமாகக் கேட்டுள்ளார்கள். இது போன்ற வரத்தை யாரும் என்னிடம் கேட்டதே இல்லை. நீ மட்டும் எதற்காக இப்படி ஒரு வரத்தை விரும்புகிறாய்? என்று கண்ணன் கேட்டான். அதற்கு குந்திதேவி, '' நான் நாள் தோறும் உன்னை நினைத்துக் கொண்டே இருக்க விரும்புகிறேன். ஆனால் துன்பம் வந்தால்தான் உன்னை நினைக்க முடிகிறது. அதனால்தான் அப்படிப்பட்ட வரம் கேட்டேன் '' என்றாள். குந்திதேவியின் வரம் வினோதமாக இருந்தாலும் அதன் மூலம் அவளது உயர்ந்த பக்தி வைராக்கியத்தை உணர முடிகிறது அல்லவா!

சரசாலை
க. சிவசங்கரநாதன்

# மீளக்குடியமர்வு கொடுப்பனவு வழங்க யாழ். செயலகத்துக்கு 1 கோடி ரூபா

யாழ்ப்பாணம், மே 29

மீளக்குடியேறியோருக்கான 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவதற்கு இவ்வருடம் யாழ். செயலகத்திற்கு ஒரு கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை வன் செயலினால் கடும் பாதிப்புற்றோருக்கான கொடுப்பனவு வழங்குவதற்காக 10 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வன் செயலினால் கொல்லப்பட்டோரில் 7 ஆயிரத்து 705 பேரது குடும்பங்களுக்கும், காயமடைந்தோரில் ஆயிரத்து 380 பேருக்கும் இதுவரை கொடுப்பனவு வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ - 5)

## நினைவு தினம்

தேவரையாளி இந்துக் கல்லூரி நிறுவுனர் கா. சூரன் ஆசாரியார் தினம் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 1.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் ம. குட்டித்தம்பி தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் ஆ. கதிரவேலு கலந்துகொள்வார். (ஐ-ரீ)

### பண்டத்தரிப்பு சந்தியிலுள்ள

# எரிபொருள் நிலையத்தை பொறுப்பேற்க கோரிக்கை

சண்டிலிப்பாய், மே 29

தற்போது மூடப்பட்ட நிலையில் இருக்கும் பண்டத்தரிப்பு சந்தியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தை பொதுமக்களின் நலன் கருதி பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பொறுப்பேற்று நடத்த வேண்டும் —

இவ்வாறு சங்க நிர்வாகத்தைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்று கடந்த சனிக்கிழமையன்று நடைபெற்ற கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் பண்டத்தரிப்பு கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிளைச் சங்க தலைவர் நா. வ. சிவபாதம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் 25 வருடங்களுக்கு மேல் கடமையாற்றிவரும் சங்கப் பணியாளர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட வேண்டும்.

ஆளணியை மீள வரையறை செய்து கூட்டுறவுத் திணைக்களம் விடுத்த சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பளம் வழங்கப்பட வேண்டும்.

முன்னர் பண்டத்தரிப்பு பிரதான வீதியில் இயங்கிய 9 ஆம்இலக்க, 19 ஆம் இலக்க கிளைகளை அதே இடத்தில் மீண்டும் இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

சேதாரக் கழிவு 0.25 வீதம் சுற்றறிக்கையின் படி வழங்கப்பட வேண்டும்.

ஆகிய தீர்மானங்களும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. புதுவருட நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது. (ஐ-135)

# அனுமதியின்றி வைத்திருந்த 11 துப்பாக்கிகள் மீட்பு

கொழும்பு, மே 29

கொழும்பிலுள்ள பிரபல தனியார் பாதுகாப்பு நிறுவனம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட திடீர்ச் சோதனையின் போது உத்தரவுப் பத்திரம் இல்லாது வைக்கப்பட்டிருந்த 11 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பாணந்துறை பொலிஸ் நிலையத்தின் மத்திய குற்றத் தடுப்புப் பிரிவினால் இச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த தனியார் பாதுகாப்பு நிறுவன உரிமையாளரின் அம்பலாங்கொட இல்லத்தில் இருந்து ரீ – 56 ரக துப்பாக்கியும் பல துப்பாக்கி ரவைகளும் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ - 6)

## நாளை

வைகாசி - 16
சனிக்கிழமை
திதி: பஞ்சமி
முன்னிரவு 08.37 வரை.
நட்சத்திரம்: பூசம்
முன்னிரவு11.25 வரை
கரிநாள்
சுபநேரம் 02.52 –04.32
ராகுகாலம்: 08 32 –10 22
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

நல்லது கெட்டது என்று எதுவுமில்லை; அது நாம் நினைப்பதைப் பொறுத்தது.

ஷேக்ஸ்பியர்

### உள்ளூராட்சி சபைகளுக்கு

# 1 கோடி 65 லட்சம் ரூபா மீளளிக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், மே 29

1988, 89 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாண காணிப்பதிவக உறுதிகளில் ஒட்டப்பட்ட முத்திரைக் கட்டணமான ஒரு கோடியே 65 லட்சம் ரூபா யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சிசபைகளுக்கு மீளளிப்புச் செய்யப்படவில்லை.

இது தொடர்பான பட்டியல்கள் யாழ். காணிப்பதிவகத்தால் தயாரிக்கப்பட்டு திறைசேரிக்கு அனுப்பப்பட்டபோதும் இதுவரைக்கும் பணம் மீளளிப்புச் செய்யப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

உள்ளூராட்சி சபைகளும் அவற்றிற்கு மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய முத்திரை களின் கட்டண விபரமும் வருமாறு:-

★ வலி.கிழக்கு — 14 லட்சத்து 96 ஆயிரத்து 251 ரூபா.

★ வலி. தென் மேற்கு — 18 லட்சத்து 97 ஆயிரத்து 862 ரூபா.

★ வலி.தெற்கு — 19 லட்சத்து 34 ஆயிரத்து 161 ரூபா.

★ வலி.வடக்கு — 6 லட்சத்து 53 ஆயிரத்து 733ரூபா.

★ வலி.மேற்கு — 10 லட்சத்து 33 ஆயிரத்து 567 ரூபா.

★ சாவகச்சேரி பிரதேச சபை— 9 லட்சத்து 18 ஆயிரத்து852 ரூபா.

★ சாவகச்சேரி நகரசபை — 5 லட்சத்து 27 ஆயிரத்து 321 ரூபா.

★ நல்லூர் — 18 லட்சத்து 43 ஆயிரத்து 308 ரூபா.

★ யாழ் மாநகரசபை — 44 லட்சத்து 10 ஆயிரத்து 583 ரூபா.

★ வேலணை— 11 லட்சத்து28 ஆயிரத்து 972 ரூபா.

★ ஊர்காவற்றுறை — 7 லட்சத்து 42 ஆயிரத்து 161 ரூபா

(ஐ-5)

# ச. ச. நிலையங்கள் புனரமைக்க ஏற்பாடு

வட்டுக்கோட்டை, மே 29

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்த அராலி தெற்கு, வட்டு. கிழக்கு சனசமூக நிலையங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் நிதி உதவியுடன் இச்சனசமூக நிலையங்களை புனரமைக்க பிரதேச செயலர் நடவடிக்கை எடுத்துள்ளார்

(ஐ-12-ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்

க. பொ. த. சாதாரணதர பரீட்சையில்
8 பாடங்களிலும் அதிவிசேட சித்திபெற்ற

**வைதேகி வேலாயுதம்**
**அனுராதா அம்பலவாணர்**

ஆகியோரை பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துவதோடு, அவர்களை ஊக்குவித்த ஆசிரியர்களையும், பெற்றோரையும் வாழ்த்தி நிற்கின்றோம்.

குடும்ப நண்பன்
அன்ரன் செல்வராசா குடும்பத்தினர்

மொடேன் ஸ்ரோர்ஸ்,
நெல்லியடி,
கரவெட்டி.
(சி[3862)

COMMERCIAL BANK

## யாழ். கொமர்ஷல் வங்கியின்
**ஆதரவில்**

யாழ். மாவட்ட பாடசாலைகள் கிறிக்கெட் சங்கம்
நடத்தும்
15, 17 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான
கிறிக்கெட் சுற்றுப் போட்டி.

**ஆரம்பம்:- 30 - 05 - 1998**

உங்கள் சிறார்களின் வளமான எதிர் காலத்திற்கென வடிவமைக்கப்பட்ட பராயமடையாதோருக்கான சேமிப்புத் திட்டம்.

## 'அருணலு'

எங்கள் அதீத அக்கறை
உங்கள் சிறார்களின் வளமான எதிர் காலமே!

(சி-3857)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி
## சாம்பசிவம் இராசபூரணி
(நயினாதீவு)

மலர்வு **29 — 05 — 1950**
உதிர்வு **29 — 04 — 1998**

அன்பிற்கோர் அணையா விளக்காய் அவதரித்த அன்புத் தெய்வமே! குடும்ப குல விளக்காய் மிளிர்ந்து எமது நலம் காத்த தாயே! எம்நெஞ்சில் என்றென்றும் நீங்காத உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரது பிரிவுச்செய்தி கேட்டு எமக்கு நேரில்ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அன்னாரின் மறைவுடன் தொடர்புபட்ட அனைத்துக் கருமங்களிலும் உதவிய அம்பிகைகளஞ்சிய ஸ்தாபனத்தினருக்கும், மற்றும் பல்வேறு வகைகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது இல்லத்தில் இன்று (29 - 05 - 98) நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்,

பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள், தாயார்,
சகோதர சகோதரிகள்,
மைத்துனன்மார், மைத்துனிமார்.

5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
(56567)

## தடகள விளையாட்டுப் போட்டி

வலிகாமம், மே 29

வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலகப் பிரிவு விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப்போட்டிகள் சங்கானை பிரதேச செயலர் கா. சந்திரராசா தலைமையில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நாளைசனிக்கிழமையும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளன.

மேற்படி விழாவில் பிரதம விருந்தினராகயாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன், சங்கானை பிரகிக்கல்விப்பணிப்பாளர் எ,வி. கணேசலிங்கம், கல்லூரி அதிபர் கா. சந்திரபாலன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஐ-86-ரீ)

## நூலகம் இயங்குகிறது

சண்டிலிப்பாய், மே 29

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தின் பொது நூல் நிலையம் பண்டத்தரிப்பு சந்தைக்கு அண்மையிலுள்ள உப அலுவலக கட்டடத்தின் ஒரு பகுதியில் இயங்கி வருகின்றது.

நூல்கள் இரவல் கொடுக்கும் பணி இன்னும் இங்கு ஆரம்பிக்கப்படவில்லை.

இப்பகுதியிலுள்ள பொது மக்கள் அலுவலக நேரத்தில் இங்குவந்து நூல்களைப்பெற்றுப் படிக்க முடியும் என்றும் நூலகர் தெரிவித்தார். வலி. தென்மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகம் அண்மையில் 50 புதிய நூல்களை இந்த நூலகத்திற்கு வழங்கியுள்ளது. (ஐ-135)

## விளையாட்டு போட்டி

திருநெல்வேலி, மே 29

வலிகாமம் கிழக்கு சனசமூக நிலையங்களின் சமாசத்தினால் நடத்தப்படும் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

கிரிக்கெட் போட்டி. உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், தாச்சி, கயிறு இழுத்தல், 25 மைல் சைக்கிள் ஓட்டம் 5 மைல் மரதன் ஓட்டம் ஆகிய பல்வேறு போட்டிகள் நடைபெறவிருப்பதாக சமாசத்தின் செயலாளர் க. தர்மலிங்கம் தெரிவித்தார்.

(ஐ - 135)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 29

'கபடி' விளையாட்டில் ஈடுபடும் கழகங்களின் உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஈச்சமோட்டை வீதியில் உள்ள உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தின் சுதேச விளையாட்டுக்களில் ஒன்றான 'கபடி' விளையாட்டை ஊக்குவிக்கவும், அதனை நாடளாவிய ரீதியில் பிரபல்யப்படுத்தும் நோக்குடனும் இக் கலந்துரையாடல் கூட்டப்பட்டிருக்கிறது.

'கபடி' விளையாட்டில் ஈடுபாடுள்ள கழகங்களின் பிரதிநிதிகளையும், மற்றும் விளையாட்டுத்துறை ஆர்வலர்களையும் இக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்க அங்கத்தவர்
திருமதி
**செல்லத்துரை சரஸ்வதி**
அவர்கள்

அமரத்துவம் அடைந்தமையையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் ஐக்கிய நாணய சங்கம்.

(56375)

## 31 ஆம் நாள் நினைவூற்று



மண்ணுலகில் 31 — 12 — 1939
விண்ணுலகில் 29 — 04 — 1998

## அமரர் C. K. பரமலிங்கம்
(யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர்)

போற்றி உமை பார் மகிழ்ந்து பாராட்டி
ஏற்றம் பெறும் வேளை எங்கிருந்து
தோற்றினான் அக் காலனவன் - உந்தனை
சற்றும் எதிர் பாராது அருமை மைந்தனுடன்
இணைக்க.
எமது இதயம் சிந்தும் இரத்தக் கண்ணீரை
உம் மலரடியில் சமர்ப்பித்து
வேண்டுகின்றோம். சாந்தி!

மனைவி, மகள்மார், மருமகன்,
உறவினர்.

36/16, காட்டுக் கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
(56340)

## நல்லூர் ப. நோ. கூ. சங்கம்
## பதவி வெற்றிடம்

**உறுப்பினர் தொடர்பு**
மற்றும்
**பயிற்சி அளிக்கும் உத்தியோகத்தர்**

மேற்படி பதவிக்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**சம்பள அளவுத்திட்டம்:**

165/88-201/12-2850 - 4450 (31/97சுற்று நிருபம்)
70X10 — 90X19

இத்துடன் சங்கத்தால் வழங்கப்பட்டு இதர படிகளும்.

**வயது:**

23 — 45 வரை.
(கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது. அவர்கள் விண்ணப்பங்களை கடமையாற்றும் சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும்)

**தகைமைகள்:**

அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 13ஆம் சம்பளத் திட்டத்தில் உறுப்பினர்தொடர்பு/பயிற்சி அளித்தல் பற்றிய பதவியொன்றில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்
அல்லது
கூட்டுறவுச் சங்க ஊழியர் 14ஆம் சம்பளத் திட்டத்தில் பதவியொன்றில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்
அல்லது
ஆ) கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ் / க. பொ. த. (உயர்தரம்) 3 பாடங்கள் சித்தி.

**விண்ணப்ப முடிவு திகதி: 15 — 06 — 1998**

சங்கத்தால் கோரப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை சங்கத்திலிருந்து பெற்று பூர்த்தி செய்து 'பொதுமுகாமையாளர், நல்லூர் ப, நோ.கூ. சங்கம், திருநெல்வேலி' என முகவரியிட்டு, கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

தகுதியற்றதும் முடிவு திகதிக்கு பின் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பொது முகாமையாளர்,
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்.
(சி-3860)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டெல்கா DELKA

மணிக்கூடு, றேடியோ, ரி. வி., டெக் திருத்துபவர்கள்
அத்துடன்

சுப்பஸோ கலர்படச் சேவையின்
கலர்பட[சுருள்களின்
வடமராட்சி, தென்மராட்சி
ஏக சேகரிப்பு முகவர்கள்

டெல்கா, பஸ் நிலையம், சாவகச்சேரி.
(மீன் சந்தை அருகில்) (சி/3872)



## வீனஸ் டெல்கா கொம்யுனிக்கேஷன்

உள்நாட்டு, வெளிநாட்டு
நேரடித் தொலைபேசிச் சேவை,
(இரவு / பகல்)
284, ஸ்ரான்லி வீதி,
(நாகவிகாரை முன்பாக)
யாழ்ப்பாணம்.
(அமைதியான சூழல், குறைந்த கட்டணங்கள்) (சி/3876)


## வருடாந்த பரிசளிப்புவிழா

சுன்னாகம்–மயிலணி சைவ மகா வித்தியாலயவருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் சு. துரை சிங்கம் தலைமையில் நடைபெற இருக்கின்றது.

யாழ். கல்வி வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசளிப்புரை நிகழ்த்துவார்.

உடுவில் கல்விக்கோட்ட கல்வி அதிகாரி அ. தற்பரானந்தன் நிறுவுநர் நினைவுப் பேருரை வழங்குவார். செல்வி சாந்தினி ஸ்ரீநிவாசன் நிறைவுரை நிகழ்த்துவார்.

(ஐ-152)


## விக்னா கல்வி நிறுவனம்

O/L DAY CLASS (8-30 - 2-00)
EVENING (3-15 - 5-30)
பிரிவு II

ஆண்டு 10, 9, 8, 7, 6, வகுப்புக்கள்
(3-15 — 5-30)

ஆரம்பம்: 01 - 06 - 1998

முக்கியகுறிப்பு:

★ 21 ஆவது வருட சேவை
★ தனித்துவமான ஆசிரியர் குழுவினால் மாதாந்த பரீட்சை மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது.
★ அனுமதிகளை முன் கூட்டியேபெற்றுக்கொள்ளவும்.

(56392)


## 6ஆம் மாத நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04 — 11 — 1978 | 04 — 12 — 1997 |

### நாகராசா அரிபரசேகரன்

ஆசை மகனே! அன்பான செல்வமே!
அப்பாவைத் துடிக்கவைத்து
அம்மாவைக் கதறவைத்து
சகோதரர்களைத் தவிக்கவைத்து
நீ எங்கேயடா சென்றாய்?
எம் அன்புச் செல்வமே!
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாகராசா குடும்பத்தினர்

நிரந்தர முகவரி:
பலாலி மத்தி,
வசாவிளான்.

தற்காலிக முகவரி:
இருபாலை கிழக்கு,
கோப்பாய்.

(56395)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்
ம. இன்பராஜ்
அவர்களின் சகோதரன்

### ம. கோகுலராஜ்

அகால மரணமடைந்ததையிட்டு ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதுடன் குடும்பத்தாரின் துயரத்திலும் பங்கேற்கின்றோம்.

99 கணித பிரிவு மாணவர்கள்
யாழ். மத்திய கல்லூரி

(56386)

## கல்வி டிப்ளோமா விண்ணப்பம்

யாழ்ப்பாணம், மே 29

பட்டப்பின் கல்வி டிப்ளோமாக் (1998/1999) கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ். கல்விவலயம் ஒன்றைச் சேர்ந்த ஆசிரியர்கள் தங்கள் விண்ணப்பங்களை யாழ். இந்துக்கல்லூரியில் இயங்கும் பிராந்திய நிலையத்துக்கு அனுப்பிவைக்குமாறு கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(ஐ-8)


## விக்னா கல்வி நிறுவனம்

A/L 2000
கலை, வர்த்தகம்
புதிய பிரிவு
ஆரம்பம்: 30 - 05 - 1998

(56393)


## அளவெட்டி
## கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்
## வெகுதானிய வருட மஹோற்சவம் - 1998

கொடியேற்றம்: 31-05-1998 ஞாயிற்றுக்கிழமை காலை 11-00 மணியளவில்

திருவிழாக்கால நேர அட்டவணை

| | பகல் | இரவு |
|---|---|---|
| அபிஷேகம் | காலை 8-00 | மாலை 2-30 |
| பூசை | காலை 9-00 | மாலை 3-00 |
| தம்பபூசை | காலை 9-45 | மாலை 3-30 |
| வசந்த மண்டபப் பூசை | காலை 10-30 | மாலை 5-30 |
| திருவிழாப் பூர்த்தி | பி. பகல் 1-00 | |

2. சப்பறத் திருவிழா: 08-06-1998 திங்கட்கிழமை மாலை 4-00 மணியளவில்
3. தேர்த் திருவிழா: 09-06-1998 செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணியளவில்
4. தீர்த்தத் திருவிழா: 10-06-1998 புதன்கிழமை காலை 9-00 மணியளவில்

தேர், தீர்த்தத் திருவிழாக்கால நேர அட்டவணை

| | தேர் காலை | தேர் மாலை | தீர்த்தம் காலை | தீர்த்தம் மாலை |
|---|---|---|---|---|
| அபிஷேகம் | 6-00 | — | 6-00 | — |
| பூசை | 7-00 | 3-30 | 6-30 | 3-00 |
| தம்பபூசை | 7-30 | 4-00 | 7-00 | — |
| வசந்த மண்டபப்பூசை | 8-00 | 4-30 | 8-00 | — |
| மஹா தீர்த்தம் | | | காலை 9-00 | கொடியிறக்கம் 4-30 |

தேர்த்திருவிழாவன்று பிற்பகல் 1-30 மணியளவில் தேர் மண்டபத்தில் பஞ்சமுக அர்ச்சனை நடைபெற்று பிற்பகல் 2–15 மணியளவில் மூர்த்திகள் ஆலயத்திற்கு எழுந்தருளுவர்.

**பூங்காவனத் திருவிழா:**

11 – 06 – 1998 வியாழக்கிழமை பகல் அபிஷேகம் நடைபெறும். இரவுத்திருவிழா பி. ப. 3-00 மணியளவில் ஆரம்பமாகி 6-00 மணிக்குப் பூர்த்தியடையும்.

குறிப்பு: தேர்த்திருவிழா அன்னதானத்துக்கு உதவுபவற்றை ஆலயச் செயலகத்திற் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்ளவும். அன்னதானத்துக்கு மூடையாக அரிசி வழங்குபவர்கள் தயவு செய்து அதற்குரிய தொகையைப் பணமாகச் செலுத்தவும்.

★ **29-5-98** இன்று கும்பாபிஷேகம் நடைபெறும். பண உதவி, பொருள் உதவி செய்பவர்கள் செயலகத்தில் வழங்கி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

ஆலயக் குருமார்களும்,
தர்மகர்த்தாக்கள் சபையினரும்.

(56384)

## புலமைப் பரிசில்-1998

29 ஆவது பரீட்சையில் அதிகூடிய புள்ளிகள் பெற்றோர்

1. சி. யோகானந் (யா. இ. ஆ. பா.)
2. த. அஜந்தன் (யா. இ. ஆ. பா.)
3. ரா, கஸ்தூரி
4. தி. பிரசாந் (யா. இ. ஆ. பா.)
5. சு. பூர்ணிமா (யா. ச. மா. ம. வி.)
6. உ. உமையாள்
7. பா. கௌந்திகா (யா. இ. ஆ. பா.)
8. இ. நிருசன் (யா. இ. ஆ. பா.)
9. அ. சுலக்ஷன்
10. ம. விமல்ராஜ் (யா. இ. ஆ. பா.)
11. சி. சுலக்ஷன் (யா. இ. ஆ. பா.)
12. த. பிரியந்தன் (யா. பரி. கல்.)
13. க. ஜனகன் (யா. ந. தெ. ஸ்ரீ. வி.)

அடுத்த பரீட்சை
31 — 05 — 1998

**BOND**
((யாழ் நகர்.)
(56400)


## ஜவுளி உலகின் முன்னோடிகள்!

மங்கள வைபவங்களுக்கேற்ற பட்டுப்புடைவைகள் மற்றும் இதர ஜவுளி தினுசுகளுக்கு நாடவேண்டிய இடம்

## ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ.

13, 14, பெரியகடை,
யாழ்ப்பாணம். (சி/3867)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்; மே 29
கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஞானப்பழனி முருகன் தேவஸ்தான மஹோற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

பகல் திருவிழா தினமும் காலை 9 மணிக்கும், இரவுத் திருவிழா பிற்பகல் 3 மணிக்கும் ஆரம்மாகும்.

எதிர்வரும் ஜூன் 7 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

(ஐ-8-30)

★ ★ ★

கந்தரோடை அருளானந்தப்பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிப்பத்துத்தினங்கள் நடைபெறும்,

ஜூன் 6 ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும், 7 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 8 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 9 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் சிறப்பு உற்சவங்களாக நடைபெறும்.

(ஐ-152)

★ ★ ★

நாரந்தனை – சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அடுத்த மாதம் 10 திகதி வரை நடைபெறவுள்ளது.

தினமும் காலை 10 மணிக்கு விசேட பூஜை ஆராதனைகளும் 11 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் இடம்பெற்று 12 மணிக்கு சுவாமி வீதியுலா வருவார்.

உற்சவ காலக் கிரியைகள் சிவாகம கிரியா ஜோதி சிவஸ்ரீ சோ. வரதராஜக்குருக்கள் தலைமையில் நடைபெறும்.

(ஐ-ரீ-30)

★ ★ ★

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளது.

(ஐ-173)

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 29
நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலில் இன்று வெள்ளிக்கிழமை காலை மாதாந்த சதுர்த்தி உற்சவம் நடைபெறும்.

(ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, மே 29
அரியாலை நீர் நொச்சித் தாழ்வு அருள் மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த கும்பாபிஷேகத்தின் சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

மாலை 4.30 மணிக்கு பஞ்சமுக விநாயகர் பூந் தொட்டியில் வீதி வலம் வருவார்.

(ஐ-17-30)

★ ★ ★

கொழும்புத்துறை, மே 29
சங்கரத்தை பிட்டியம்பதி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் மணவாளக் கோல சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். நண்பகல் 12 30 மணிக்கு மகேஸ்வர பூசை இடம்பெறும்.

(ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, மே 29
கொழும்புத்துறை ஆத்தியம்பதி ஸ்ரீ சந்திரசேகரர் விநாயகர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு வளர்பிறை சதுர்த்தித் திருவிழா நடைபெறும்.

இதனை அடுத்து பெருமான் மூசிக வாகனத்தில் உள் வீதி வலம் வருவார்.

---

### தெஹிவளை.

(முதலாம் பக்கத் தொடர்)

கண்டவர்கள் தெரிவித்தனர்.

இக்குண்டு வெடிப்பால் சென். மேரிஸ் தேவாலயத்துக்கும், அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த கார் ஒன்றுக்கும் சேதம் ஏற்பட்டது.

இந்த மின்மாற்றி தகர்க்கப்பட்டதால் 300 வீடுகளுக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டது.

இதனால் 6 இலட்சம் ரூபா மின்சார சபைக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு — கிழக்குக்கு வெளியே இதுவரை 15 மின் மாற்றிகள் சேதமாக்கப்பட்டதாகவும் —

அதன் மூலம் ஒரு கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-3-7-21-10)

**Is Security A Problem!**

Contact:

The Director,
**Golden Eagle Security Service,**
347, Kasthuriyar Road,
Jaffna.

Our Services Include
★ Consultancy on all Industrial Security.
★ Providing well trained Security personnel with attractive Uniform.
★ Investigation and Confidential Inquries..
★ Training of personnel.
★ Fine Protection.

Managed by well experience officers leading in this field.

**HARY'S INSTITUTE**

KONDAVIL EAST, KONDAVIL.

யாழ். பல்கலைக்கழக 1 ஆம் வருட
ARTS, COMMERCE, MANAGEMENT
மாணவர்களுக்கான ENGLISH LANGUAGE
PAPER CLASS
BY: MR. M. A. HARI (B. A. Dip in Eng.)
ஆரம்பம்: 01-06-98 திங்கள் காலை 6 30 மணி
● அனுமதிகளை முன்கூட்டியே உறுதிப்படுத்துங்கள்
DIRECTOR
(55422)

# புலிகளின் இரண்டு ஆயுதக்கப்பல்கள்
# இலங்கை நோக்கி வருகின்றன?

கொழும்பு, மே 29
புலிகளுக்கு ஆயுதங்களை ஏற்றிக் கொண்டு 2 கப்பல்கள் இலங்கையின் கிழக்குக் கரையோரப் பகுதிக்குள் நுழையத் தயார் நிலையில் உள்ளன என இந்திய — இலங்கை கடற்படை அதிகாரிகளுக்குத்தகவல் கிடைத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தகவலை இந்திய புலனாய்வுத்துறையினர் முதலில் தெரிவித்தனர் என்றும் சென்னையை அண்டிய கடற்பிரதேசத்தில் இந்த 2 கப்பல்களும் இலங்கையை நோக்கிச் செல்வதாக இலங்கை கடற்படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது என்றும் கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

இதற்கிடையில் முல்லைத்தீவில் உள்ள சாலை கடற்கரையை அண்டிய பகுதியில் புதிதாக வீதி ஒன்று அமைக்கப்படுவதை விமானமோட்டியின்றி இயங்கும் விமானம் எடுத்து அனுப்பிய புகைப்படங்களில் இருந்து அவதானிக்க முடிகிறது எனவும் —

இந்தக் கப்பல்களில் கொண்டுவரப்படும் ஆயுதங்களை கப்பல்களில் இருந்து இறக்கி புலிகளின் முகாம்களுக்கு கொண்டு செல்லவே இந்தப் பாதை அமைக்கப்பட்டிருக்கலாம் எனவும் பாதுகாப்புத்துறையினர் சந்தேகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-10)

---

### 5 அணு..

(முதலாம் பக்கத் தொடர்)

அணு வெடிப்புப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

முதலில் 2 பரிசோதனைகளும் பின்னர் 3 பரிசோதனைகளும் நடத்தப்பட்டன.

இப்பரிசோதனைகளால் சகாய் மலையை அண்டியுள்ள பகுதிகள் அனைத்தும் அதிர்ந்ததாகக் கூறப்படுகின்றது.

அணு வெடிப்புப் பரிசோதனைகள் முடிந்ததும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப் சர்வதேச வானொலியில் தோன்றி அணு வெடிப்புப் பரிசோதனைகள் குறித்து விளக்கம் கொடுத்தார்.

பாகிஸ்தானின் வெடிப்புப் பரிசோதனைகளை அமெரிக்கா, நேபாளம், இந்தியா ஆகிய நாடுகள்நேற்று கடுமையாகக் கண்டித்தன.

இந்தியா நடத்திய அணு வெடிப்பு பரிசோதனைகளைத் தொடர்ந்து அந்நாட்டின் மீது அமெரிக்கா பொருளாதாரத்தடை விதித்தது போல் பாகிஸ்தான் மீதும் பொருளாதாரத் தடை விதிக்கப்படலாம் என வெள்ளை மாளிகை நேற்றிரவு அறிவித்தது. பாகிஸ்தானின் நடவடிக்கையால் உப கண்டத்தில் அணு ஆயுதப் போட்டி உருவாகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

(இ-7)

---

### மாங்குளத்தை.

[முதலாம் பக்கத் தொடர்]

கிறது.

மாங்குளம் நகரைக் கைப்பற்றும் நோக்குடன் கடந்த மாதத்தில் மும்முனைகளில் ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கை புலிகளின் எதிர்த் தாக்குதலால் பிற்போடப்பட்டிருந்தது.

'மெதுவாக முன்னேறுதல்' என்ற புதிய உத்தியுடன் ஒலுமடுவில் இருந்து படையினர் நகரத் தொடங்கினர் என்றும் —

புலிகளும் எதிர்த் தாக்குதல்களை மேற்கொண்டனர் என்றும் — வவுனியாவுக்குக் கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

சேதவிவரங்கள் நேற்றிரவு வரை வவுனியாவுக்குக் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

அதே நேரம் — பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த முக்கிய இராணுவ தளபதிகள் சகிதம் நேற்றுக் காலை போர் முனைக்குச் சென்று நகர்வு வியூகங்களை பார்வையிட்டு படை அதிகாரிகளுடன் கலந்துரையாடினார் என்றும் —

இவரின் விஜயத்தை ஒட்டி வவுனியாவில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

எமது புதிய
வெளியீடு!
அப்பாஸ் - கௌசல்யா
நடித்த
**ஜாலி**
**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்.
(சி/3866)

## சுற்றி வளைப்பில்
## 23 தமிழர்கள் கைது!

கொழும்பு, மே 29
தெஹிவளையில் நேற்று அதிகாலை இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து தெஹிவளை, கல்கிசை, இரத்மலானைப் பகுதிகள் சுற்றி வளைக்கப்பட்டுத் தேடுதல் இடம்பெற்றது.

இத்தேடுதலின் போது 23 தமிழர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்களில் சிலர் பெண்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதிகளில் உள்ள தமிழர் வீடுகளிலேயே பெரிய அளவில் தேடுதல் இடம்பெற்றதாகவும் — வீதியில் சென்ற தமிழர்களும் சோதனை செய்யப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை — இக்குண்டு வெடிப்பு விடுதலைப் புலிகளினாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

### நூல் வெளியீடு

எழுதுமட்டுவாள் வரத விநாயகர் ஆலய வரலாற்று நூல் வெளியீட்டுவிழா இன்று நண்பகல் 12-00 மணிக்கு ஆலய மண்டபத்தில் வே. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

---

### ஜி சீ. ஈ.

(முதலாம் பக்கத் தொடர்)

**யாழ். சன்மார்க்க வி.**
5டி, 2சி, எஸ் — ஒருவர், 2டி, 2சி, 2எஸ் — ஒருவர்.

**வைத்தீஸ்வரா**
2டி, 3சி, 2எஸ் — ஒருவர், 2டி, 4சி, எஸ் — மூவர், 2டி, 4சி — ஒருவர்.

**நாவாந்துறை றோ.க.வி.**
டி, 5சி, எஸ் — ஒருவர், டி, 3சி, 2எஸ் — ஒருவர்.

**கொட்டடி நமசிவாய வி.**
4சி, 3எஸ் — ஒருவர், 3சி, 3எஸ் — ஒருவர்.

**கொக்குவில் இந்து**
7டி, சி — இருவர், 6டி, சி எஸ் — இருவர், 5டி, 2சி, எஸ் — இருவர், 5டி, சி, 2எஸ் — மூவர், 5டி, சி, எஸ் — ஒருவர், 5டி, சி — இருவர், 4டி, 3சி — மூவர், 4டி, 2சி, — ஐவர், 3டி, 5சி ஒருவர், 3டி, 4சி — நால்வர், 3டி, 3சி — நால்வர், 3டி, 3சி, எஸ் — இருவர்.

**நல்லூர் இந்து தமிழ் பெண்கள்**
2டி, 3சி, 2எஸ் — ஒருவர்.

**கொக்குவில் நாமகள்**
டி, 3சி, 3எஸ் — ஒருவர்.

**கொக்குவில் ஞானபண்டித**
2டி, 5சி — ஒருவர்.

**திருநெல்வேலி முத்துத்தம்பி**
2டி, 4சி, எஸ் — ஒருவர் டி, 4சி — ஒருவர்.

**கந்தர்மடம் சைவப்பிரகாச**
3டி, 3சிஎஸ் — ஒருவர், டி, 5சி — இருவர்.

**சென். அன்ரனி றோ. க மகளிர்**
3டி, 2சி, 2எஸ் — ஒருவர், 2டி, 4சி, 2எஸ் — ஒருவர், 2டி, 2சி, 8எஸ் — ஒருவர், 2டி, 2சி. 2எஸ் — ஒருவர்.

**சென். ஜோசப்**
3சி, 4சி — ஒருவர்.

**கோண்டாவில் இந்து**
2டி, 5சி — ஒருவர், 2டி, 4சி, எஸ் — ஒருவர், 2டி, 3சி, எஸ் — ஒருவர், டி, 4சி, எஸ் — ஒருவர்.

**நல்லூர் ஸ்தான**
5டி, 2சி, எஸ் — ஒருவர், 3டி, 2சி, 2எஸ் — ஒருவர், டி, 4சி — ஒருவர், 2டி, 3சி ஒருவர், டி, 5சி — ஒருவர்

**அரியாலை சிறி பார்வதி**
டி, 3சி, எஸ் — ஒருவர், டி, 2சி, 3எஸ் — ஒருவர், டி, 2சி, எஸ் — ஒருவர்.

**கோண்டாவில் இராம கிருஷ்ண**
3டி, 3சி, எஸ் — ஒருவர், 2டி, 4சி, எஸ் — ஒருவர், 2டி, 3சி, 2 எஸ் — ஒருவர், 2டி, 2சி, எஸ் — ஒருவர், 2டி, சி, 3 எஸ் — ஒருவர், டி, 3சி, 3 எஸ் — ஒருவர், டி, 3சி, 2 எஸ் ஒருவர், டி, 2சி, எஸ் — ஒருவர், டி, 4சி, எஸ் — ஒருவர்.

**யாழ். மத்திய கல்லூரி**
5 டி — ஒருவர், 4 டி — நால்வர்.

**வேம்படி மகளிர்**
8 டி — ஒருவர். 5 டி — 18 பேர், 4 டி — 14 பேர்.

**அச்சுவேலி சரஸ்வதி**
5 டி, சி, எஸ் — ஒருவர்.

**அச்சுவேலி ம.வி**
3டி, 3சி, எஸ் — ஒருவர்.

**ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வி.**
5டி, 2சி, எஸ் — மூவர்.

**அச்சுவேலி புனித திரேசா**
டி, 6 சி — ஒருவர்.

**சென். பற்றிக்ஸ்**
7 டி — இருவர், 6 டி — இருவர், 5 டி — ஐவர்.

**சுண்டுக்குழி மகளிர்**
8 டி, — இருவர், 7 டி — நால்வர், 6 டி — ஐவர், 5 டி — மூவர்.

**சென் ஜோன்ஸ்**
8 டி — இருவர், 7 டி — மூவர், 6 டி — நால்வர், 5 டி — ஒன்பது பேர்.

**நல்லூர் விக்கினேஸ்வரா**
4சி, 2எஸ் — ஒருவர்.

**யாழ். புனித மரியாள் வி.**
4டி, 2சி, 2 எஸ் — ஒருவர்.

**புனித சாள்ஸ்**
3டி, 3சி, 2எஸ் — ஒருவர்.

**சண்டிலிப்பாய் இந்து**
5டி, 2சி — ஒருவர், 4டி, 3சி — ஒருவர், 2டி, 4சி, எஸ் — ஒருவர்.

**திருக்குடும்ப கன்னியர் மடம் (ஆங்கில) பாடசாலை**
8டி — ஒருவர், 7டி சி — ஒருவர், 6டி 2சி — ஒருவர்.

**யாழ். கன்னியர் மடம் ம. வி.**
3டி 3சி 2 எஸ் — மூவர், 2 டி 3 சி எஸ் — ஒருவர், டி 3 சி 3 எஸ் — நால்வர்.

(இ-3-9-51-11-5-ரீ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சக மனையில் 29-05-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org